

1-11-1977 50 காசு.

பதிவு எண். M. 8676



# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# தமிழரசு

1 - 11 - 1977

மலர் : 8 இதழ் : 9

## இந்த இதழில்

பக்க எண்

இந்தியாவை உருவாக்கிய சிற்பி! .. 2

வெள்ளம் விளைத்ததோ வேதனை! அரசு செய்ததோ சாதனை! .. 6

பிற்பட்டோர் நலங்காப்போம்! .. 9

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகள் .. 14

சித்தேரி மலைவாழ் மக்களுக்கு வனத்துறை செய்திடும் நன்மைகள் .. 17

படமும் செய்தியும் .. 22

கூட்டுறவுப் பயிற்சிக்கு ஒரு கல்லூரி .. 27

அரசினர் அருங்காட்சியகம் ஆற்றிடும் பணிகள் .. 34

வேளாண்மை மறுநிதி-அபிவிருத்திக் கழகத் திட்டங்கள் .. 41

பேனுவின் கதை! .. 43

வேடந்தாங்கல் நீர்ப்பறவைச் சரணலயம் .. 45

வெள்ளத்துயர் துடைப்புப் பணிகளுக்கு அள்ளி வழங்குங்கள்! . 48

### அட்டைப்பட விளக்கம்

பறவைகள் பலவிதம் பார்த்து மகிழ, வேடந்தாங்கல் சென்றிடுவீர் ! வேடந்தாங்கலில், பல்வேறு நாட்டுப் பறவைகளையும், பலவண்ணப் பறவைகளையும் நவம்பர் முதல் பிப்ரவரி வரைக் கண்டுகளிக்கலாம்! வேடந்தாங்கல் பறவைகள் உய்விடம் பற்றி அறிய பக்கம் 45-ஐப் பாருங்கள்.

## தேவர் பிறந்த நாள் விழா !

விடுதலை வீரரும், அரசியல் தலைவரும், தேவர்குலத் திலகமுமான பசும்பொன் திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை இந்த ஆண்டு தமிழ்நாடு அரசே நடத்தியுள்ளது. அரசின் சார்பில் முதல்முறையாக மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் 30-10-'77 அன்று தேவர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. தேவரின் பிறந்த நாளும், இறந்த நாளும் அக்டோபர் 30-ம் நாள் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சென்னை மாநகரில் குடிநீர் பஞ்சம் என்றென்றும் ஏற்படாதிருக்க வேண்டும் என்பதற்காக, கிருஷ்ணா நதியில் இருந்து நீர் கொண்டு வருவதற்கான உடன்பாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 28-10-77 அன்று கையொப்பம் இட்டுள்ளார்.

நீண்டகாலமாக ஆலோசனையில் இருந்துவந்த இந்தத் திட்டம் பற்றி டெல்லியில், மாண்புமிகு மத்திய விவசாய — பாசன அமைச்சர் திரு எஸ். எஸ். பர்னலா அவர்கள் முன்னிலையில், 27—10—1977 அன்று, பேச்சு வார்த்தை நடந்தது.

கிருஷ்ணா ஆறு மராட்டியம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களில் ஓடும் ஆறு ஆகும். எனவே, இந்தப் பேச்சு வார்த்தையில் மாண்புமிகு மராட்டிய முதலமைச்சர் திரு. வசந்தராவ் பட்டீல், மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்சு, மாண்புமிகு ஆந்திரா மாநில பாசன அமைச்சர் திரு கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு சார்பில் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும், மாண்புமிகு தமிழ் நாடு பொதுப்பணித்துறை அமைச்சர், திரு. ச. இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரை ஆந்திராவில் உள்ள ஸ்ரீசைலத்தில் இருந்து வடபெண்ணை ஆற்றுக்குத் திறந்த கால்வாய் மூலம் கொண்டு வந்து, அங்கிருந்து சோமசீலா அணை (இப்போது கட்டப்பட்டு வருகிறது) வழியாகத் தண்ணீரை மற்றொரு கால்வாய் மூலம் செங்கல்பட்டு மாவட்டம் பூண்டி ஏரிக்குக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டும் உள்ளது.

வழியில் இந்தத் தண்ணீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தக் கூடாது என்பது நிபந்தனை. இதை அவ்வப்போது அதிகாரிகள் நேரில் பார்வையிட்டுச் சோதனை செய்வார்கள் என்றும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்துக்கு 143 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவாகும். இந்தச் செலவைத் தமிழக அரசு ஏற்கும்.

இத்திட்டம் சென்னை மாநகர மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் மாபெரும் திட்டமாகும் !

# இந்தியாவை உருவாக்கிய சிற்பி!

— திரு பிரபுதாஸ் பட்வாரி
தமிழ்நாடு ஆளுநர்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பு-இந்தியாவிலிருந்து பாகிஸ்தானைப் பிரிப்பதற்கு முன்பு-இந்தியாவில் 556-க்கும் மேற்பட்ட சுதேச சமஸ்தானங்கள் இருந்தன. அவைகளின் மொத்தப் பரப்பு இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ 48 சத அளவுக்கு இருந்துள்ளது. அவைகள் விரும்பினால் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேர்ந்து கொள்ளலாம் அல்லது தனித்து இயங்கலாம் என்று வெள்ளை ஏகாதிபத்தியம் கள்ள மனத்துடன் அறிவித்துவிட்டது. சுதேச சமஸ்தானங்கள் விடுதலை பெற்ற இந்தியாவுடன் சேராமல் தனித்து இயங்கினால், இந்திய ஒருமைப்பாட்டுக்கு-ஒற்றுமைக்கு-பாதுகாப்புக்கு-கேடு விளையும் என்பதை எண்ணிய, 'இரும்பு மனிதர்' என்று பெயர் பெற்ற திரு **சர்தார் வல்லபாய் பட்டேல்** அவர்கள், தம் ராஜ தந்திரத்தைப் பயன்படுத்தி சுதேச சமஸ்தானங்களையெல்லாம் இந்தியாவுடன் இணைத்து ஏக இந்தியாவை ஏற்படுத்தி, 'இந்தியாவை உருவாக்கிய சிற்பி' (Architect of India) என்ற பெயர் பெற்றார். அவருடைய பிறந்தநாள் விழா 31-10-1977 அன்று நாடெங்கும் நடைபெற்றதையொட்டி அவருடன் நெருங்கிப் பழகிய தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், திரு சர்தார் பட்டேல் அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை இக் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

"ஜனக ராஜா போன்று ஈடு இணையற்றிருந்த ஒருவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அரண்மனைப் பளபளப்புக்கும், அரச ஆடம்பரத்திற்கும் இடையே எதிலும் பற்றற்று வாழ்ந்த ஜனக ராஜாவைப் போல், அவர் வாழ்ந்தார். அரசாங்கத்தில் அவர் இருந்ததன் காரணமாகவே, நாடு என்னும் நாவாய் அவருடைய கைகளில் மிகுந்த பாதுகாப்புடன் இருப்பதாக மக்கள் உணர்ந்தனர்."

—இவ்வாறு, 1950-ஆம் ஆண்டு டிசம்பர் 15-ஆம் நாள் அன்று, திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் மறைந்த துக்கச் செய்தியைத் தன் ஆஸ்ரமத்தில் கூடியிருந்த கிராம மக்களிடையே திரு வினோபா அவர்கள் கூறினார். இக்கூற்று, ஓரளவுக்கு சர்தார் அவர்களின் குணநிசயத்தைச் சுருங்கக் கூறுவதுடன் பாரத மாதாவுக்குச் சர்தார் செய்த செயற்கரிய சேவையையும், அதன் மூலம் அவர் எய்திய இறவாப் புகழையும் சுருக்கமாக எடுத்துக் காட்டுகிறது.

சாக்ரட்டீஸ் காலத்தில் பரவியிருந்த அறிவுப் பேரொளியைத் தான் காண நேர்ந்ததற்கும், சாக்ரட்டீஸின் மாணவனாக இருக்கும் அரிய வாய்ப்பைத் தான் பெற்றதற்கும் கடவுளின் பெருங் கருணையே காரணம் என்று புகழ்பெற்ற தத்துவஞானி பிளேட்டோ கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதிகார வர்க்கத்திற்கு எதிராக, பர்தோலி வட்டத்தின் விவசாயிகள் அனைவரையும் அகிம்சா முறையில் போராட திரு சர்தார் பட்டேல் தூண்டியதை நினைக்கும்போது கடவுளுடைய அளவற்ற கருணையின் காரணமாகவே, திரு சர்தார் அவர்களின் உணர்ச்சிமிக்க விளக்கவுரைகளை-மந்திர சக்தியைப் போல், மக்களிடையே வலிமையையும், துணிவையும் ஏற்படுத்தி, பயந்தாங் கொள்ளிகளாக இருந்தவர்களை உண்மையான வீரம் மிகுந்தவர்களாக ஆக்கிய உணர்ச்சி மிக்க விளக்கவுரைகளை-பேரார்வத்துடன் கூர்ந்து கவனிக்கும் வாய்ப்பு எனக்கும் ஏற்பட்டது என்பதை நான் அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். திரு சர்தார், மக்களின் உணர்ச்சியைத் தூண்டிய அந்தக் காலத்தை, பிரேம் லீலா தாக்கர்சே என்பவர் பின்கண்டவாறு நினைவு கூர்கிறார்.

''சாதாரண கடவுளிடம் பயந்த சுபாவம் கொண்ட பர்தோலி விவசாயிகளை வீரதீரம் மிகுந்தவர்களாக மாற்றியதோடு, பயந்தாங்கொள்ளிகளாகவும், அறியாமையில் மூழ்கியவர்களாகவும் இருந்த விவசாயக் குடும்பப் பெண்களை ராஜபுதனத்து வீராங்கனைகளாகவும் மாற்றினார் சர்தார்.''

காந்திஜியைப் போலவே, திரு சர்தார் அவர்களும் மனிதர்களைச் செம்மையாக்கி, நமது தேச வாழ்வைச் செழிக்கச் செய்வதற்கு அவர்களின் சக்திகளை ஒருமுகப்படுத்தி விட்டார்.

துயர்துடைப்புப் பணிகளில் சர்தார் ஆற்றிய பங்கு, குஜராத் மாநிலத்திற்கு வெளியில் தெரியாத செய்தியாக உள்ளது. அப்பணிகளில் அவர் பெருமகிழ்வுடன் ஈடுபட்டார். தரித்திர நாராயணர்களுக்குச் சேவை செய்த தன் மூலமாகவே, நாட்டின் நலனுக்காக உழைக்கும் வலிமையை—யாருக்கும் இல்லாத வல்லமையை— பெற்றார்.



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவாகள், இந்தியாவை ஒன்றுபடுத்திய இரும்பு மனிதர் திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் திருவுருவப் படத்தை, சென்னை காந்திமண்டபத்தில், 22—9—1977 அன்று திறந்து வைத்து உரையாற்றினார். அவ்விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், சென்னையில் உள்ள எலியட்ஸ் கடற்கரைச் சாலைக்கு 'சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை' என்று பெயரிடப்படும் என்று அறிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் முறையான துயர் துடைப்புப் பணிகளை மேற்கொண்டதில் திரு சர்தார் அவர்களே முன்னோடி என்றால் மிகையாகாது. நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த (1918) சர்தார், 'பிளேக்', 'இன்புளுவென்சா' ஆகிய நோய்கள் தாக்கிய போதிலும் தற்காப்புக்காக நகரைவிட்டு அகன்று விடாமல், மக்களின் அருகில் இருந்து பணியாற்றுவதையே விரும்பினார். அந்த நாட்களில் பாரிஸ்டர் வல்லபாய் அவர்கள், நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, ஆறாத்துயரில் மூழ்கியிருந்தவர்களை அகம் மகிழச் செய்வதற்காக, ஒவ்வொரு சேரியாக நடந்து சென்றார். 'பிளேக்' நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக, தற்காலிக மருத்துவ மனைகளையும் திறந்து வைத்தார். இவைகளையெல்லாம் சர்தார் எந்தவித ஆரவாரமும் இன்றியே செய்தார்.

குஜராத் மாநிலம் 1927-ஆம் ஆண்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, ஒரு வார காலத்திற்கு மழையினால் பாதிக்கப்பட்டது. அப்போது அவர் மேற்கொண்ட துயர் துடைப்புப்பணி, குஜராத் முழுவதையும் தழுவியதாக இருந்தது. மழை கொட்டும் அந்த நள்ளிரவில், சர்தார் தூக்கமின்றித் துடித்தார். அவரால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. கொட்டும் மழையையும், கும்மிருட்டையும் பொருட்படுத்தாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஒரு நண்பரின் வீட்டை அடைந்து, அந்த நண்பரையும் அழைத்துக் கொண்டு, நகரில் பாதிக்கப்படக் கூடிய எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார்; அதன் பின் நேரடியாக நகராட்சி மன்ற பொறியாளர் இல்லம் சென்று, தூங்கிக் கொண்டிருந்த பொறியாளரை எழுப்பி, அவரையும் அழைத்துக் கொண்டு நகராட்சி மன்ற அலுவலகம் சென்றார். நகராட்சி ஊழியர்களையும், பணியாளர்களையும் உடன் அழைத்து வரச் செய்து, மழையால் தேங்கிய வெள்ளத்தை வடிக்க விரைவான நடவடிக்கை எடுத்து, நகரம் மேலும் பாழடையாமல் காப்பாற்றினார். மக்களுக்குரிய கடமையைச் செய்வதில் சர்தார் கொண்டிருந்த உணர்வுக்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக் காட்டாகும்.

அப்பொழுது காந்திஜி பெங்களூரில் உடல்நலமின்மையால் படுத்த படுக்கையாக இருந்தார். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்வதற்குக்கூட வலிமை இல்லாதிருந்தும், சர்தார் ஒப்புக் கொண்டால் தானும் வருவதாகக் கூறி, காந்திஜி, சர்தா

ருக்குத் தந்தி கொடுத்தார். 'சுய உதவி, கூட்டுறவு பற்றிய உங்களின் போதனைகளை எந்த அளவுக்கு நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை அறிய விரும்பினால், நீங்கள் அங்கேயே தங்கி உடல் நலம் பெறுங்கள்' என்று கூறி திரு சர்தார் அவர்கள், காந்திஜி அவர்களுக்குப் பதில் தந்தி கொடுத்தார். இயற்கையால் ஏற்பட்ட தீங்குகளிலிருந்து குஜராத்தை விடுவிப்பதில் சர்தாரின் உள்ளார்ந்த, ஆழமான திறமைகளில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்ததால், சர்தாரின் ஆலோசனையைக் காந்திஜி ஏற்றுக் கொண்டார். திரு சர்தாரின் துயர் துடைப்புப் பணிகள் குஜராத்தின் மூலைமுடுக்குகளில் இருந்த கிராமங்களையும் அடைந்தன. இவ்வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் முறையாகவும், கட்டுப்பாடாகவும் நடைபெற்றதால், இரண்டே மாதத்தில், குஜராத் இயல்பான நிலைக்குத் திரும்பியது. காலந் தவறாமலும், முழு நிறைவாகவும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் கண்டு அரசு வியந்தது. திரு சர்தாரின் பணிகளைப் பாராட்டியது; வீடிழந்த பல்லாயிரக் கணக்கானவர் மீண்டும் புதிதாக வீடுகட்டிக் கொள்வதற்கு எளிய கடனும், நன்கொடையும் வழங்குவதற்காக ரூபாய் 2 கோடி அளவில் ஒதுக்கி வைத்தது.

இத்துடன் நிறுத்திக் கொண்டு, நவீன இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு திரு சர்தார் ஆற்றியுள்ள சேவையைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகின்றேன். பிரிந்து கிடந்த சுதேச சமஸ்தானங்களை ஒன்று சேர்த்து, இந்த நாட்டை ஒரே நாடாக ஆக்குவதில் சர்தார் ஆற்றிய பணிக்கு ஈடாக, முன்னெப்போதும் எவரும் இதுவரை செய்யவில்லை எனலாம்.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்கு முந்திய காலத்தில் 556-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்கள், இந்தியாவின் மொத்தப் பரப்பில் 45 சத அளவைக் கொண்டிருந்தன. துரதிர்ஷ்டவசமாக பிரிவினை ஏற்பட்ட போது, அச்சமஸ்தானங்களின் பரப்பு சுமார் 48 சத அளவுக்கு உயர்ந்தது. ஜம்மு-காஷ்மீரின் பரப்பு மட்டுமே 82,000 சதுர மைலாக இருந்தது. 10,000 சதுர மைலுக்கும் மேற்பட்ட பரப்புக் கொண்ட 15 சமஸ்தானங்கள் அப்போது இருந்தன. மேலும் அப்போது, 1,000 சதுர மைல் முதல் 10,000 சதுர மைல் வரையான பரப்புக் கொண்ட 67 சமஸ்தானங்கள் இருந்தன. அந்த நாளைய இந்தியாவைச் சுருக்கமாக வரைய, ஏராளமான திட்டுகள் குறிக்கப்பட்டன.

அரசியலமைப்புச் சட்டப்படி, சுதேச சமஸ்தானங்கள் தாய்நாட்டின் ஓர் அங்கமாகக் கருதப்படவில்லை. விக்டோரியா மகாராணியின் அறிவிப்பு (1858) முதல், 1946-ஆம் ஆண்டு மே மாதத்தில் வேவல் பிரபு வெளியிட்ட தெளிவாக்க அறிக்கை வரையான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தொடர்ந்த அதிகார அறிவிப்புகள், சுதேச சமஸ்தானங்கள் தாய்நாட்டிலிருந்து செயற்கையாகப் பிரிந்திருப்பதற்கே ஆதரவு அளித்துள்ளன. முந்திய அரசியலமைப்பு முடிவுகளில், மாண்டேகு பிரபுவும், செம்ஸ்போர்டு பிரபுவும் சேர்ந்து, அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றி 1919-ஆம் ஆண்டில் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் தெரிவித்துள்ள கூட்டுக் கருத்து இதற்கோர் எடுத்துக் காட்டாக உள்ளது. அதன் விவரம் வருமாறு:—

''ஏற்படவிருக்கும் அரசியல் அமைப்பு மாற்றம் (பிரிட்டிஷ் இந்தியா) எதுவும், காலங் காலமாக நடைமுறையில் உள்ள ஒப்பந்தங்கள், சன்னதுகள், வாக்குறுதிகள் ஆகியவைகளின் படி அரசர்கள் அனுபவித்து வரும் உரிமைகள் மதிப்புகள், தனிச்சலுகைகள் முதலியவைகளைப் பறிக்காது என்று இந்தியாவில் உள்ள சமஸ்தானங்களின் அரசர்கள், முழுமையாகவும் நிர்பந்தமின்றியும் உறுதியளிக்கப்பட வேண்டும்''.

இந்த ஏகாதிபத்தியக் கொள்கையின் நோக்கம் ஒரு கல்லில் இரு பறவைகளை வீழ்த்துவதேயாகும்! முதலாவதாக இக்கொள்கை, அரசர்களால் ஆளப்படும் இந்தியாவில் தேசிய உணர்வு ஏற்படுவதைத் தடுக்கும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டது. இரண்டாவதாக இது, சுதந்திரத்தற்காக இந்தியாவை ஒன்றுபடுத்துவதென்பது நடைபெற முடியாத ஒரு செயலாக ஆக்க வேண்டும் என்ற இறுதி நோக்கத்துடன் அரசர்களால் ஆளப்படும் இந்தியாவையும், அப்போதிருந்த பிரிட்டிஷ் இந்தியாவையும் பிரிக்கும் எல்லையாக அமைந்திருந்தது.

வேவல் பிரபு, 12-5-1946 அன்று, அரசர்கள் சங்கத்தில் அளித்த உறுதியை இந்த இடத்தில் எடுத்துக் கூறுவதும் மிகுந்த பொருத்தமானதாக இருக்கும். அவர், ''பேச்சு வார்த்தைகள் மூலமாக அல்லாத வேறு எதன் மூலமாகவும் இந்திய அமைப்பில் சமஸ்தானங்களைச் சேர்ப்பதற்குரிய தீர்மானத்தைக் கொண்டு வரும் நோக்கம் பிரிட்டிஷ் அரசுக்கு இல்லை'' என்று உறுதி கூறினார். இத்தகைய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ள அரசர்கள் சங்கம் முயன்றது.

சமஸ்தான அரசர்களின் உள்ளக் கிடக்கையை நன்கு உணர்ந்து கொண்ட சர்தார் அவர்கள் இந்தியாவில் சேருமாறு ஒவ்வொரு சமஸ்தானத்தையும் தூண்டி வந்தார். இந்தியா சுதந்தரம் பெறுவதற்கு முன்பே, அரசியல் நிர்ணயசபையில் சமஸ்தானங்கள் பங்கு பெறலாம் என்ற உறுதியையும் அளித்தார். இந்தியாவின் ஒற்றுமைக்குப் படிப்படியாக உழைத்தார்.

காலந் தாழ்த்தினால் கேடு விளையும் என்பதை நன்கு உணர்ந்திருந்த சர்தார் அவர்கள் சமஸ்தானங்களில் ஏற்பட்ட தனித்திருக்கும் உணர்வை முளையிலேயே கிள்ளியெறிவதற்கான நடவடிக்கைகளை, குழப்பம் விளைவிக்காமல், எடுத்தார். பொதுமக்களின் நல்வாழ்விலிருந்து அரசர்களின் வாழ்வு பிரிந்ததல்ல என்றும், தாய்நாட்டின் ஓர் அங்கமாகவே சமஸ்தானங்கள் இருப்பதால், சகோரத்துவத்தின் அடிப்படையில் தங்கள் ஆட்சியைத் தாய்நாட்டுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சர்தார் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதனால் சமஸ்தானங்களின் இளவரசர்கள், சர்தார் அவர்கள் நடுநிலைமையாக நடந்துகொள்வார் என்றும், தங்களுடைய உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பார் என்றும் நம்பினர். அந்த நம்பிக்கையின் காரணமாகவும், தாய்நாட்டுப் பற்றின் கார்ணமாகவும் முன்னதாகக் கையொப்பமிட்ட வெற்றுத்தாளைச் சர்தாரிடம் கொடுத்தனர்!

சமஸ்தானங்களின் அரசர்கள் இந்தியாவுடன் சேருமாறு கட்டாயப்படுத்தப்பட்டனரா? இல்லை. அவ்வாறு கட்டாயப்படுத்தி இருந்தால் நிலைமை வேகமாக முன்னேறி இருக்காது. சமஸ்தானங்களின் அரசர்களும் திரு சர்தாரிடம் பெருமதிப்பு வைத்திருக்க மாட்டார்கள்; திரு சர்தார் இறந்தபோது, கைவிடப்பட்ட நிலைமை அடைந்துவிட்டதாக சமஸ்தானங்களின் அரசர்கள் துயரம் அடைந்திருக்க மாட்டார்கள். தோழமையுடனும், தாய்நாட்டுப் பற்றுடனும் சமஸ்தானங்களின் அரசர்கள் சர்தாரை நம்பி இந்தியாவுடன் சேர முன்வந்ததாலும், சமஸ்தான அரசர்களின் நலனை நன்கு உணர்ந்து அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க திரு சர்தார் முன் வந்ததாலும் இந்தியாவில் "இரத்தம் சிந்தாத புரட்சி" ஒன்று ஏற்பட்டது என்று கூறலாம். இப்புரட்சியில் சமஸ்தான இளவரசர்களும், மக்களும், இந்திய அரசும் கூட்டாளிகளாகவே செயல்பட்டு, மகாத்மாவின் கனவை நனவாக்கினர் என்றால் மிகையாகாது.

இந்திய வரலாற்றில் இது ஒரு முக்கியமான கட்டமாகும். பிரிந்து கிடக்கும் இந்தியாவை ஒன்று படுத்த வேண்டும் என்று மகாத்மா கனவு கண்டார்; அந்தக் கனவை நனவாக்கும் உணர்வைத் தூண்டினார். அண்ணலின் கனவை நனவாக்கும் கருவியாக சர்தார் விளங்கினார். அவரது அயராத முயற்சியால் ஏற்பட்ட புரட்சியின் அரங்கேற்றம், இணைப்பு ஒப்பந்தம் என்ற உருவில், 1947-ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்றது. ஆம்! அன்றுதான் 22,000 சதுர மைல் பரப்பும், வெவ்வேறு எல்லைகளையும் கொண்ட 449 கத்தியவாடு சமஸ்தானங்கள் 'சௌராஷ்டிரா யூனியன்' என்ற பெயரில் கிழக்கு மற்றும் மத்திய இந்தியாவைச் சார்ந்த 40 'பி' மற்றும் 'சி' மாநிலங்கள் இந்தியாவுடன் இணைந்தன. இந்த நிகழ்ச்சி, மேலும் பல சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைய வழிகோலியது. அடுத்து மத்திய யூனியன், சிறிய ராஜஸ்தான், விந்திய பிரதேஷ், மத்தியபாரத் எனப்படும் 'மால்வா' 'பெப்சு' முதலிய சமஸ்தானங்கள் இந்தியாவுடன் இணைந்தன. பெரிய ராஜஸ்தான் யூனியன், திருவாங்கூர்-கொச்சி யூனியன் ஆகிய இரண்டும் 1949-ல் இந்தியாவுடன் இணைந்தன.

சமஸ்தானங்களை இணைப்பதில் சர்தார் எதிர்கால நோக்கோடும், சில முக்கியமான யுக்திகளோடும் செயல்பட்டார். அவர் முதலில் சௌராஷ்டிராவைத்தான் இணைத்தார். ஏனெனில், அங்குதான் குழப்பம் விளைவித்துச் சிறுசிறு அரசுகளாகப் பிரிந்திருக்க வேண்டும் என்பதற்காகத் துணிகர முயற்சிகள் நடைபெற்றன. இந்தியாவின் பாதுகாப்பைப் பொறுத்தவரையில் பூகோள அடிப்படையில் பார்க்கும் போது 'கட்ச்' பகுதிதான் பாதிக்கப்படக் கூடிய பகுதியாக இருப்பதாக திரு சர்தார் கருதினார். ஆகவே 'கட்ச்' பகுதியை மத்திய அரசின் நேரடி ஆட்சியில் இயங்கச் செய்தார். இதேபோல், வடக்கிலிருந்து ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து காத்துக் கொள்வதற்கான பாதுகாப்புத்தளம் அமைப்பதற்காகவே 'பெப்சு' யூனியனை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று கருதினார்.

ஜுனகாத், ஹைதராபாத், காஷ்மீர் ஆகிய மூன்று சமஸ்தானங்களைத் தாய்நாட்டில் இணைப்பதில்தான் பிரச்சனைகள் மிகுதியாகத் தோன்றின. ஜுனகாத், ஹைதராபாத் ஆகிய இரண்டையும் இந்தியாவுடன் இணைப்பதில் சர்தார் முழு மூச்சுடன் ஈடுபட முடிந்தது. ஆனால் காஷ்மீர் இணைப்பைப் பொறுத்த வரையில் அவரால் முழுமூச்சுடன் ஈடுபட முடியவில்லை. ஏனெனில், காஷ்மீர் பிரச்சனை ஆரம்பம் முதலே மாநில அமைச்சரவையால் கவனிக்கப்பட்டு வந்தது. பாரமூலா என்ற இடத்திற்கு மிக அருகில் எதிரிகள் இருந்த நேரத்தில், திரு கிருஷ்ண மேனன் அவர்கள் ஸ்ரீநகருக்கும், ஜம்முவுக்கும் சென்று, மகாராஜாவிடம் இணைப்பு ஒப்பந்தத்தில் கையொப்பம் வாங்கச் சென்றதையும், காஷ்மீர் பள்ளத்தாக்கைக் காப்பாற்றுவதற்காக இந்தியப் படைகளை விமானம் மூலம் அனுப்பும் நோக்கத்துடன் டெல்லி விமான நிலையத்திலேயேதிரு சர்தார் அவர்கள் திரு கிருஷ்ணமேனனின் வருகைக்காகக் காத்திருந்ததையும் இந்த நேரத்தில் நினைவு கூர்வது சிறப்புடையதாகும். காஷ்மீர் மலைப் பிரதேசத்தில் நமது படையினர் காட்டிய வீர தீரம் மிக்க செயல்கள் பாராட்டிற்குரியதாக இருந்தன.

ஆனால் வெகு விரைவிலேயே, காஷ்மீர் பிரச்சனையை டெல்லி மேற்கொண்ட வகைக் கண்டு, திரு சர்தார் நம்பிக்கையைக் கைவிட்டார். நம்பிக்கை இழந்த நிலையிலேயே, சர்தார் காஷ்மீர் பிரச்சனையிலிருந்து தன் கைகளைக் கழுவிக் கொண்டார்.

பிரிந்துகிடந்த இந்தியாவை ஒன்று படுத்த, அமைதிப் புரட்சி நடத்திய-பண்பாட்டாலும் பழக்க வழக்கத்தாலும் பல்வேறு வேறுபாடுகளைக் கொண்டிருந்த பெரிய நாட்டை ஒன்றுபடுத்திய-இந்திய மக்கள் வாழ்வது போலவே, சமஸ்தானங்களின் மக்களும் உரிமைகளுடனும், சுதந்திரமுடனும் வாழ வகை செய்த-திரு சர்தார் அவர்களை நினைத்துப் பார்த்தால், இந்திய ஒற்றுமைக்காக அவர் செய்த செயற்கரிய செயல் வெள்ளிடைமலையென விளங்கும். அந்த ஒற்றுமையே நமக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரத்தில் கைகொடுத்து உதவியதுடன், எதிர்காலத்தில் தோன்றும் எந்த வித பேராபத்திலிருந்தும் இந்தியாவைக் காப்பாற்றக் கூடியதாகவும் உள்ளது. இதற்காகவே நாம் திரு சர்தார் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளோம். இந்தியாவை ஒன்றுபடுத்துவதே இலக்காக இருந்தாலும், இந்நிகழ்ச்சி நடைபெற்ற காலத்தின் அண்மையில் நாம் வாழ்வதால், இதனால் ஏற்பட்ட நன்மை தீமைகளை ஆராய்வது கடினமானதாகும். எதிர்காலச் சந்ததியும், வரலாற்று ஆசிரியர்களும் உண்மையை உணர்வதுடன், இச்சாதனையை ஏற்றிப் போற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.

நமது நாட்டை ஒன்றுபடுத்தி, உயர்காப்பாளராகத் திகழ்ந்த திரு சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களுக்கு என் வணக்கத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**(தமிழாக்கம் : ஆர். மாணிக்கம்)**



# வெள்ளம் விளைத்ததோ வேதனை! அரசு செய்ததோ சாதனை!!

வடகிழக்குப் பருவமழை தொடங்கிய இரு வாரங்களுக்குள்ளாகவே, தமிழகமெங்கும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்த இராமநாதபுரம் மாவட்டத்தில்கூட நல்ல மழை பெய்து, ஏரி குளங்கள் நிரம்பியுள்ளன. பல்லாண்டுகளாக நிரம்பாதிருந்த இராஜசிங்க மங்கலம் ஏரிகூட இந்த ஆண்டில் நிரம்பியுள்ளது. நீர்த்தேக்கங்களில் எல்லாம் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இந்த ஆண்டில் சாகுபடி நல்ல முறையில் நடைபெறும், மின்வெட்டு இருக்காது என்று எண்ணி மகிழ்ந்திருந்த நேரத்திலே, இன்பமும் துன்பமும் இணைந்தேவரும் என்பதை எடுத்துக்காட்டுவதுபோல் புயல் தோன்றியது!

அக்டோபர் மூன்றும் வாரத்தில் தோன்றிய புயலின் காரணமாகச் சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் பெருமழை ஏற்பட்டு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளன. புயல் தோன்றியவுடனேயே தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கையாக நடவடிக்கைகளை மேற்கொண்டது.

பெருமழை காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைச் சமாளிக்கவும், அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள் பற்றி பரிசீலிக்கவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்**, 26-10-1977 அன்று, உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்றைக் கூட்டினர்.

அதிகாரிகளுடன் கலந்து பேசிய பிறகு, கீழ்க்கண்ட ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்தார்.

1. சென்னை நகரைப் பொறுத்தவரை, தற்போது நடந்து வரும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து நீடிக்கவேண்டும்.

2. சென்னை கோட்டூர்புரம், வியாசர்பாடி ஆகிய இடங்களில் உடனடியாக நிவாரண நடவடிக்கைகளைத் தீவிரமாக மேற்கொள்வதுடன், நிரந்தர நிவாரணப் பணிகளையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

3. செம்பரம்பாக்கம் ஏரியில் அதிகத் தண்ணீரைத் தேக்குவதற்கும், ஏரியில் வந்து பாயும் தண்ணீருக்கு மாற்று வழியைக் காணவும் ஆராய்ந்து ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும்.



4. சென்னை நகருக்குள் அதிக அளவில் பாயும் வெள்ளத்தைத் தேக்கி வைத்துக் காக்கும் நீர்த் தேக்கங்கள் பலவற்றை, சென்னையைச் சுற்றி அமைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. சென்னை சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேக்கத்தினால் அவதிப்படும் மக்கள் குறைகளைத் தீர்க்க, அந்தப் பகுதி மக்களுடன் கலந்து ஆலோசித்து, தேவையான திட்டங்களை அரசுக்குக் கொடுக்க, வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ஆர். நடராசன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் பார்வையிட்டு, அவதியுறும் மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், நிவாரணப் பணிகள் விரைந்து நடைபெற ஆவன செய்தனர்.

தமிழ்நாட்டில் கடந்த அக்டோபர் மாதக் கடைசியில் பெய்த மழையினால் வீடு இடிந்து விழுந்தும், இடி—மின்னல் தாக்கியும், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டும் இறந்தவர்கள் எண்ணிக்கை 74.

இவ்வாறு விபத்தினால் செத்தவர்கள் குடும்பத்திற்கு எந்த அளவுக்குப் பண உதவி தேவை, அவர்கள் மறைவினால் அந்தக் குடும்பங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்று தனித் தனியாகக் கணக்கெடுத்து, தேவைக்குத் தகுந்தாற்போல் உதவிப் பணம் வழங்கப்படும்.











அதிகப்பட்சம் ஒரு குடும்பத்துக்கு 2 ஆயிரம் ரூபாய் வரை கொடுக்கப்படும்.

தமிழ்நாடு முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 1 இலட்சத்து 95 ஆயிரத்து 450 உணவுப் பொட்டலங்கள் வீதம் வழங்கப்பட்டன.

சென்னையில் 1 இலட்சத்து 65 ஆயிரம், மதுரையில் 14,150, செங்கல்பட்டில் 9,150, கோவையில் 6,000, இராமநாதபுரத்தில் 5,750 உணவுப் பொட்டலங்கள் வீதம் வழங்கியிருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சியினர் 10,000 குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் பால் வழங்கி இருக்கிறார்கள்.

செம்பரம்பாக்கம் ஏரியினால் சென்னைக்கு ஆபத்து வரக் கூடாது என்பதற்காகப் பொதுப் பணித்துறை அலுவலர்கள் விழிப்புடன் கண்காணித்து வருகின்றனர். அந்த ஏரியில் இருந்து விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

உணவுப் பொட்டலங்கள் வழங்குவது 'காலரா' நோய்க்குத் தடுப்பு ஊசி போடுவது போன்றவை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, வெள்ளத்தில் வீடிழந்து தவிப்பவர்களுக்கு உதவி செய்ய, பொதுமக்கள் தாராளமாக நன்கொடை அளிக்க முன்வரவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**



# பிற்பட்டோர் நலங் காப்போம்

**பி**ற்பட்ட வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும்பகுதியினர் என்பதன் காரணமாக, அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், 1977-78-ம் ஆண்டிற்கு திட்ட மதிப்பீட்டில் ரூ. 6,40,90,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இது இப்பிற்பட்ட நலத் துறை, பிற்பட்டோர் நலனுக்கென எடுத்துள்ள விரைவான முழுமூச்சான நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுகிறது. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொதுத் திட்டங்கள் பிற்பட்ட வகுப்பின் முன்னேற்றம் கருதியே செயல்பட்டு வருகின்றன.

பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்காகப் பிற்பட்ட நலத் துறை அமைச்சரின் தலைமையில் ''மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு'' ஒன்று இயங்கி வருகிறது. இக்குழுவைத் திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதேபோல் மதுரை மாவட்டத்தில் பிறமலைக்கள்ளர்களின் முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக் குழு உள்ளது.

**உபகாரச் சம்பளம்**

1. பிற்பட்ட வகுப்பு மக்கள் நல்ல உடல் வலுவிருந்தும் உழைக்கக் கூடிய தன்மை இருந்தும் கல்வி கற்கப் போதிய வசதியின்மையால் இன்னமும் பிற்பட்ட நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு, கல்வி மேம்பாட்டுக்கு வழி வகை செய்வது மிக அவசியம். ஆகவே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் படிப்பு வசதிக்காக உபகாரச் சம்பளங்கள், உணவு விடுதிகள் முதலிய வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. ஏழ்மையான குடும்பத்து மாணவர்கள் உபகாரச் சம்பளத்தினாலும் விடுதிகளில் தங்குவதாலும் தங்கள் படிப்பைத் தொடர முடிகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு முதலாம் வகுப்பிலிருந்தும் உபகாரச் சம்பளம் வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகை பெறுவதற்கு மாணவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்கும் அதிகமாக இருக்கக் கூடாது. உதவித் தொகை பெற, பிற்பட்ட வகுப்பு

மாண்புமிகு அரிசன நல அமைச்சர்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்,**



மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவிகிதம் மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே போதுமானது.

*1969—70*லிருந்து பட்ட மேற்படிப்பு, சட்டம், தமிழ்ப் புலவர் ஆகிய 57 பாட முறைகளுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் இம்மாணவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கான பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டண்ட்) பயிற்சி பெறும் பொழுதும் உபகாரச் சம்பளம் வழங்க அரசு அனுமதித்திருக்கிறது.

மத்திய அரசு உதவியுடன் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் *1964—65*-ல் **ஆரம்பிக்கப்பட்டது.** இதன்படி குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. இதற்கு மத்திய அரசு *1968—69* வரை நிதி உதவி செய்து வந்தது.

ஆயினும் தொடர்ந்து இந்தத் திட்டத்தின் கீழ் 1969—70, 1970—71ஆம் ஆண்டுகளில் மத்திய அரசின் உதவியின்றியே உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. 1971—72ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டத்தின் கீழ் புது மனுக்கள் ஏற்கப்படவில்லை. ஏற்கெனவே இச்சலுகை பெற்றவர்கள் அவர்கள் எடுத்துக் கொண்ட பாட முறையில் தேர்ச்சி பெற்று முடிக்கும் வரை இத் திட்டம் அவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் தற்போது மாற்றப் பட்டுவிட்டது.

**படிப்புக் கட்டணச் சலுகை**—புகுமுக வகுப்பு வரை எல்லா மாணவர்களுக்கும் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. புகுமுக வகுப்பிற்கு மேல், பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கும், மிகப் பிற்பட்ட வகுப்பு மாணவர் களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களின் வருமானம் ஆண்டிற்கு ரூ. 1,500க்கு மேற் படாதிருப்பின் முறையே அரைக் கட்டணச் சலுகையும், முழுக் கட்டணச் சலுகையும் வழங்கப்படுகிறது. இம் மாதிரிக் கட்டணச் சலுகையால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திற்கு ஏற்படும் இழப்பை இத்துறை ஈடு செய்கிறது.

**அரசு மாணவர் இல்லங்கள் :** மாணவர் கள் கல்வி பயிலும் வசதியை அதிகரிப்பதற் காக அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு, பேணப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப்படுகின்றனர் :

| | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர்க்கான விடுதிகள். | பிற்பட்டோர் வகுப்பினர்க்கான விடுதிகள். | அரிசன வகுப்பினர்க்கான விடுதிகள். |
|---|---|---|---|
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 20 |
| குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் | 60 | | |
| அரிசன் வகுப்பினர் | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | 5 |
| | 100 | 100 | 100 |

தற்பொழுது பிற்பட்ட வகுப்பினருக் காக 215 விடுதிகளும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்காக 51 விடுதிகளும் உள்ளன. 215 பிற்பட்ட வகுப்பு விடுதிகளில் 55 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக் குரியவை.

மொத்த விடுதிகள் 266ஐயும் பராமரிப்ப தற்காக 1977—78ஆம் ஆண்டிற்கு ரூ. 94,50,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக மேலும் 13 புதிய விடுதிகளைத் திறப்பதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலேயே குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பு மாண வர்களுக்காக 6 விடுதிகள் திண்டுக்கல், கம்பம், ராயப்பன்பட்டி, வெள்ளையம்மாள்புரம், தேனி (மதுரை மாவட்டம்), கோவிலாங்குளம் (முகவை மாவட்டம்) ஆகிய இடங்களில் திறக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. புதிய தாக ஆரம்பிக்கப்படும் விடுதிகளுக்காக ரூ. 4,40,000, 1977—78ல் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இதுவன்றி ஏற்கெனவே உள்ள பழைய விடுதிகள் 5ல், 185 மாணவர்களை அதிகமாகச் சேர்க்கும் பொருட்டு, 63,000 ரூபாய் நடப் பாண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்காக அனுமதிக்கப்படும் உணவுச் செலவு 1977—78 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது (அடைப்புகளில் காண்பிக்கப்பட்டவை 1977-78க்கு முந்தைய விகிதங்கள்).

| | சென்னை (ரூபாய்) | புறநகர் (ரூபாய்) |
|---|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் | 65(60) | 55(50) |
| 2. தொழிற் கல்வி மாணவர் விடுதிகள் | 65(60) | 55(50) |
| 3. இதர விடுதிகள் | 40(36) | 40(36) |



### மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்கள்

மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்க ளைக் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் ஏற்றுக் கொண்டிருக் கிறது. நடப்பாண்டில் தமிழ்நாட்டில் பல் வேறு இடங்களில் பிற்பட்ட மாணவர்களுக் காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன.

**பள்ளிக் கூடங்கள் :** பிற்பட்டோர் நலத் துறையினுல் நடத்தப்படும் பள்ளிகளுக்கு எல்லா வசதிகளுடன் கூடிய கட்டடங்களைக் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற 1976—77ல் ரூ. 1,92,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. 1977—78ல் 5 பள்ளிக் கட்டடங் களுக்காக ரூ. 3,00,000 வகை செய்யப்பட்டு உள்ளது.

**மதிய உணவு :** குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள், தம் ஏழ்மையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்ப தில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லா மல் இருப்பதற்கான தூண்டுகோலாகக் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் பள்ளிகளில் அம் மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒருமதிய உணவின் விலை 15 காசுகள், இது தவிர, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள அர

சினர் அல்லாத தனியார் பள்ளிக்கூடங்களிலும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்கள் பெரும் பகுதியினராக இருக்கின்ற காரணத்தால் அம்மாவட்டங்களில் மதிய உணவு வழங்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருள்களின் விலை அதிகமாகிவிட்டதால் ஒரு மதிய உணவின் விலை 30 காசுக்கு அதிகரிக்கும்படி கோரப்பட்டது. ஆனால், அரசு இந்த விதமான அதிகச் செலவைத் தவிர்க்க அம் மாணவர்களுக்கு ''கேர்'' நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது, அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975 முதலும், திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் ஜனவரி 1976 முதலும் அமல் செய்யப்பட்டு வருகிறது.

**கல்லூரிப் படிப்பு :** கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்லூரியினர் அங்கீகாரம் செய்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்வித் துறையினர் அல்லது அரிசன நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை அங்கீகாரம் பெற்ற விடுதிகளில் தங்கிப் படித்தாலும் அவர்களுக்கு உபகாரச் சம்பளத்துடன் உணவு,செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது.



**புத்தகங்களும், சிலேட்டுகளும் :** அரசினர் நடத்தும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் புத்தகங்களும், சிலேட்டுகளும், இனமாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்றவர்கள் 1969—70ல் 7,600 மாணவர்கள். பயன்பெற்ற மாணவர்கள் தொகை ஆண்டு தோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றும் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்பட்ட புத்தகம், சிலேட்டுகள் பெற்றவர்கள் எண்ணிக்கை 1976—77ல் 28,390. நடப்பு ஆண்டிலும் இதே அளவு மாணவர்களுக்கு இவ்வுதவி அளிக்கப்படும்.

**ஆடை வழங்குதல் :** குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் பள்ளிகளிலும் உணவு விடுதிகளிலும் உள்ள எல்லா மாணவ, மாணவியர்களுக்கும், ஒவ்வொரு ஆண்டும் 2 செட் ஆடைகள் வழங்கப்படுகின்றன. முதல் செட், பள்ளி ஆரம்பித்ததும், 2வது செட்,பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகிறது. முதன் முதலாக இவ்வாறு இலவச உடைகள் வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969—70ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றும் வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமே ஒரு செட் ஆடை வழங்கப்பட்டது. இப்போது இரு முறை வழங்கப்படுகின்றன.

மேலும் 1971—72 முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட மாணவர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் உணவு விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் 2 செட் ஆடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்காக 1977—78ல் ரூ. 3,36,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல் :** கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும் குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமைபெறத் தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டம் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதற்கு 1977—78 ஆம் ஆண்டிற்கு ரூ. 45,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் 8வது வகுப்புத் தேர்விலும், 11வது வகுப்புத் தேர்விலும் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு பரிசுகள் (முதல் பரிசு ஒன்று இரண்டாவது பரிசு ஒன்று) வழங்கப்படுகின்றன. இப்பரிசுகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு. இதற்காக இவ்வாண்டிற்கு ரூ. 2,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆசிரியர்களுக்கு வீடுகள்**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூபாய் 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படும். நடக்கும் 1977—78ஆம் ஆண்டிலும் 5 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 52,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான பயிற்சிக்கூடம் :** கடந்த 1971ல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் மற்றும் உயர் அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் எழுதப் பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட 1971—72ஆம் ஆண்டில் 12 மாணவர்கள் சேர்ந்தனர். இதில் 8 பேர் தேர்வுக்கும், 3 பேர் நேர்முகத் தேர்வுக்கும் சென்றனர். ஆனால் எவரும் தேர்ச்சி பெறவில்லை. 1972—73ல் 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 34 பேர் தேர்வு எழுதினர். 6 பேர் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்-க்கும், இருவர் மத்திய அரசுப் பணிகளுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1973—74ல் 33 பேர் தேர்வு எழுதினர். 4 பேர் நேர்முகத்தேர்வுக்குதேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் ஒருவர் ஐ.ஏ.எஸ்க்கும், ஒருவர் மத்திய

அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1974—75ல் 51 மாணவர்கள் சேர்க்கப்பட்டு, 41 பேர் தேர்வு எழுதினார்கள். இதில் 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கடைசியாக ஒருவர் ஐ.பி.எஸ்க்கும், இருவர் மத்திய அரசுப் பணிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1975—76ல் 60 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 3 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இந்திய யூனியன் தேர்வாணைக் குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்புக் கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் 15 பிற்பட்ட மாணவர்களுக்கும் 15 அரிசன, பழங்குடி மாணவர்களுக்கும் இடம் உண்டு. அம்மாணவர்களுக்குக் கைச் செலவுக்காகவும், போக்குவரத்துச் செலவுக்காகவும் மாதம் ரூ. 40 வழங்கப்படுகிறது.

## பொருளாதார வளர்ச்சி

இத்திட்டத்தின் கீழ் முடிதிருத்துவோர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் தத்தம் தொழில்களைச் செய்து வரத் தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1977—78ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ், ரூ. 6,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**சலவைத் துறைகள் கட்டுதல்** : சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலைத் திறம்பட செய்வதற்கு, சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளைச் சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சி, நகராட்சி நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்தச் செலவில் பாதி கடனாகவும், பாதி மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 39 இடங்களில் சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்குப் பொறியியல் பணிமனைகள் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மக்களின் உயர்வு கருதித் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரையில் செக்கனூரணியிலும், திருநெல்வேலியில் வீரகேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் உள்ளது. இவைகளில் பற்ற வைத்தல், சேர்த்தல் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் தொழில் நுணுக்க அறிவு பெற்று வேலை வாய்ப்புகளை அதிகம் பெற்று தங்களுடைய பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வழி வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சென்ற 1976—77ல் ரூ. 2,22,000 ஒதுக்கப்பட்டது. 1977—78ல் ரூ. 3,87,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், புதியதாக 1977—78ல் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ரூபாய் 1,49,000 செலவில் ஒரு பொது நோக்குப் பொறியியல் பணி மனை ஆரம்பிக்கப்பட இருக்கிறது பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற் பயிற்சிக் கூடங்கள் நடத்தப்படுகின்றன.

1. தையல் மற்றும் ரெடிமேடு ஆடைகள் பயிற்சிக் கூடம், பெருங்குளம், திருநெல்வேலி மாவட்டம்.

2. மூங்கில் வேலைக் கூடம், சாமியாபுரம், தர்மபுரி மாவட்டம்.

3. தையல் பயிற்சிக் கூடம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

4. பிரம்பு மற்றும் நார்ப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம்.

(1) பாகோடு, (2) குழித்துறை, கன்யாகுமரி மாவட்டம். இந்தத் தொழில் கூடங்களை நடத்துவதற்கும் பராமரிப்பதற்கும் 1977—78ல் ரூ. 1,67,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நடப்பு 1977-78ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதிதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் ஆரம்பிக்க ரூபாய் 1,37,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றின் விவரம் வருமாறு :

| மாவட்டம் | | பயிற்சியாளர்கள் |
|---|---|---|
| கன்னியாகுமரி | ... | 20 |
| அஜீஸ்நகர், தென்னூர்க்காடு | | 20 |
| மதுரை | ... | 20 |
| இராமநாதபுரம் | ... | 20 |
| திருநெல்வேலி | ... | 20 |

**விவசாயம்** : குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றிற்கு ரூ. 2,500 மானியமாக அளிக்கப்படுகிறது. இதற்காக, 1977—78ல் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



**சுகாதாரம் வீட்டு வசதி மற்றும் இதர திட்டங்கள்**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு, ரூபாய் 1,200 மதிப்பில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300 ; மானியம் ரூ. 900. சென்ற 1975-76ல் இருந்து ஒரு வீட்டிற்காக மொத்தத் தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இது ரூ. 2,025 மானியமாகவும், ரூ. 675 பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ பயனடைவோர் பங்காகவும் உள்ளது. ஒரு வீட்டிற்கு ஆகும் மொத்தச் செலவை மேலும் உயர்த்துவது அரசுப் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு 1977—78க்கு ரூ. 4,00,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**குழந்தைகள் காப்பகம்**

குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினரின் அஜீஸ் நகர் குடியிருப்பில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. இக் குழந்தைகளின் நலனைப் பேணி வளர்ப்பதற்காகவும் கருவுற்ற தாய்மார்களின் நலத்தைப் பேணுவதற்காகவும் அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவை சமூக நலத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கும். இவைகளுக்கான செலவைப் பிற்பட்டோர் நலத் துறை ஏற்கும். கேர் நிறுவனத்தின் உதவி இவைகளுக்குக் கிடைக்கும். இவைகளில் 350 தாய்மார்களும் குழந்தைகளும் சத்துணவு அளிக்கப்படுவர். ஐந்து பாலசேவகிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இத்திட்டத்திற்காக 1977-78ல் ரூ. 59,400 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறாகப் பிற்பட்ட மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[சட்டமன்றப் பேரவையில் வைக்கப் பெற்ற 1977-78ஆம் ஆண்டின் பிற்பட்டோர் நலத் துறை மானியக் கோரிக்கை எண் 32-ன் கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது].



# சமையல் கழிவைப் பன்றியின் உணவாகப் பயன் படுத்தலாம்!

தாயிடமிருந்து பிரித்த வெள்ளை யார்க்ஷயர் பன்றிக் குட்டிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவிற்குச் சமையல் கழிவை உணவாகவும், மற்றொரு பிரிவிற்குப் பன்றிக் கலப்புணவை உணவாகவும் கொடுக்கப்பட்டது. பன்றிகள் 240 நாள் வயது வரை இவ்வுணவினால் வளர்க்கப்பட்டன. இரண்டு பிரிவுகளிலும் சராசரி எடை அதிகரிப்பு, 1 கிலோ எடை கூடுதலுக்கு உணவிற்கு ஆகும் செலவு போன்றவைகள் கணக்கிடப்பட்டன. இரண்டு பிரிவிற்கும் சராசரி எடை அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடு இல்லை. 1 கிலோ எடை அதிகரிப்பிற்குச் சமையல் கழிவை உட்கொண்ட பிரிவில் 180 நாள் வயது வளர்ச்சிக்கு ரூ. 2.09-ம் செலவாகியுள்ளது. பன்றிக் கலப்புணவுப் பிரிவில் இதே வயதில் முறையே ரூ. 2.29-ம் ரூ. 3.47-ம் ஆகியுள்ளது. இந்த ஆய்வின் மூலம், சமையல் கழிவைப் பன்றியின் மலிவான உணவாகப் பயன் படுத்தலாம் என்பது தெரிய வருகிறது. **

# பன்றிக் குட்டிகள் வளர்ப்பில் சில பராமரிப்பு முறைகள்

இளம் பன்றிக் குட்டிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவிற்குத் தனிப்பட்ட சத்துணவு கொடுத்தும், மற்றொரு பிரிவிற்குத் தனிப்பட்ட சத்துணவு கொடுக்காமலும் வளர்க்கப்பட்டன. இரண்டு பிரிவுகளிலும் ஒரு பிரிவு சிமெண்ட் தரையிலும் மற்றொரு பிரிவு மண் தரையிலும் வளர்க்கப்பட்டன. சத்துணவு பெற்ற குட்டிகளைத் தாய்ப் பன்றியில் இருந்து 8 வார காலத்தில் பிரிக்கும் போது சராசரி 14·63 கிலோ கிராம் எடையும், அச்சத்துணவு கொடுக்கப்படாத பிரிவில் சராசரி 10·51 கிலோ கிராம் எடையும் இருந்தன. இக்குறிப்பிடத்தக்க எடை வேறுபாடு சிமெண்ட் தரை மற்றும் மண் தரையில் வளர்க்கப்பட்ட பன்றிகளிடையே காணப்படவில்லை. ஆகவே தரையின் தன்மை பன்றிக்குட்டியின் வளர்ச்சியைப் பாதிப்பதில்லை என்று தெரியவருகிறது. மேலும் சத்துணவு பெற்ற குட்டிகள் அவ்வுணவு பெறாத பிரிவுக் குட்டிகளைக் காட்டிலும், 154 நாள் வயது காலத்தில் அதிக எடையைப் பெற்றன என்பதும் அறியப்பட்டுள்ளது. இதில் இருந்து தாயிடமிருந்து பிரிக்கும் முன்பு கொடுக்கப்படும் சிறந்த பராமரிப்பு முறை, பன்றியின் உடல் எடையை அதிகரிக்கிறது என அறியப்பட்டுள்ளது. **

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்—3.



# பள்ளிக்கூடக் குழந்தைகளின் உடல்நலப் பிரச்சினைகள்

டாக்டர்
எ. எச். எஸ். லாரன்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
தமிழ்நாடு.

நல்ல உடல் நலமும், நல்ல கல்வியும் நெருங்கிய தொடர்பு உடையன. அவை பிரிக்க முடியாதன. உடல் நலத்தை இழந்தால் மனநிலையை இழக்க நேரிடும். கடைசியில் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்.

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பிரச்சினைகளைக் குறித்து கல்வித் துறையினரும் உடல் நலக் கல்வித் துறையினரும் ஒத்துழைப்புடன் ஆசிரியர்கட்கான புத்துணர்வு வகுப்புகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

வளரும் நாடுகளில் ஒவ்வோர் ஆண்டும் பிறக்கும் 8 கோடி குழந்தைகள், நோய்க்கான பாதுகாப்பினைப் பெறுவதில்லை. வளரும் நாடுகளில், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளில், 77 சதவீதத்திற்கும் மேலானவர்கள் உடல் நலக் குறைவினால் பாதிக்கப்படுகின்றனர். அறியாமை, மூட நம்பிக்கை, வதந்தி, ஐயம் ஆகியவைதான், இன்றைய சத்துணவின்மைக்குக் காரணங்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இத் துன்பங்களை, அறவே நீக்க, கல்விதான் சிறந்த வழியாகும். சத்துணவும், உடல் நலக் கல்வியும் நெருங்கிய தொடர்புடையன. செல்வம் கொழிக்கும் நாடுகளில், 97 சதவீதக் குழந்தைகள், நோய்த் தடுப்பு வசதிகளைப் பெற்று, அதன் பயனாகப் பலவிதமான தொத்து நோய்களினின்றும் காப்பாற்றப்படுகிறார்கள். குழந்தைகள் கூட உடல் நலப் பணியாளர்களால் பார்க்கப்படுவதில்லை.

## 1. சத்துணவும் உடல் நலக் கல்வியும் (Nutrition and Health Education): —

பள்ளியில் சேர்வதற்கு முன்பும் பள்ளியில் சேர்ந்த பிறகும், சத்துணவும், உடல் நலக் கல்வியும் இன்றியமையாதன. வாழ்க்கையின் தொடக்கத்திலேயே சரியான உடல் நலப் பழக்கங்களை ஏற்படுத்துவது மிகவும் நன்று.

நல்ல உடல் நலம், சத்துணவு ஆகியவற்றைப் பற்றிய அறிவை, குழந்தைகளுக்குப் புகட்டுவது அவசியமாகும். சரியான வழியைப் பின்பற்றுவதன் வாயிலாகத்தான், நல்லதொரு தேசிய வளர்ச்சியை நிர்மாணிக்க முடியும். குழந்தைகளிடையே, தகுந்த நேரத்தில், நோய் தடுப்பைப் பற்றித் தகுந்த கவனம் எடுத்துக்கொண்டால், வளர்ந்தவர்களிடையே ஏற்படும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும்.

## 2. கல்வித் துறையும், உடல் நலத் துறையும் (Education and Health Departments): —

நம் நாட்டில், உடல் நலமுள்ள சமுதாயத்தை உருவாக்க, கல்வித் துறையும், உடல் நலத் துறையும் ஒத்துழைப்பது இன்றியமையாததாகும். டாக்டர் கில்பார்ட்ரிக் கல்வியும் சோப்பும் மிகச் சிறந்த ஆயுதங்கள் எனக் கூறியுள்ளார். நம் சமுதாயத்தில், சிறந்த உடல் நல மாற்றத்தை ஏற்படுத்த, இவ்விரு துறைகளும் இணைந்து மிகச் சிறந்த கருவிகளாகச் செயல்பட வேண்டும். பள்ளிச் சிறுவர்களுக்கு, ஆசிரியர்களும், உடல்

**பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குச் சத்துள்ள உணவு அளிப்பதுடன், உடல் நலம், சத்துள்ள உணவு ஆகியவைப் பற்றிய அறிவைப் புகட்டுவதும் அவசியமாகும்.**





**குழந்தைகளுக்குத் தோன்றக்கூடிய நோய்கள் பற்றியும், சத்துள்ள உணவுகளைப் பற்றியும் தாய்மார்களுக்கு விளக்கம் அளித்தல் வேண்டும்.**

---

நலத் துறையினரும் ஆற்றும் தொண்டுகள், வருங்காலத்தில் மிகச் சிறந்த பயனை நல்கும். கிராமங்களிலுள்ள பெற்றோர்கள் குழந்தைகள் வாயிலாகச் சிறந்த உடல் நலப் பழக்கங்களை அறிந்து கொள்வர். குழந்தைகளின் உடல் நலம், துப்புரவு ஆகியவற்றில் பெற்றோர்கள் உதவ, இது வழி வகுக்கும்.

## 3. ஆசிரியர் விழிப்புடன் இருத்தல் (Teachers to be Vigilant):–

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலத்தைப் பேணுவதில், ஆசிரியர்கள் மிக்க விழிப்புடன் இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள், தங்கள் பாதுகாப்பிலுள்ள குழந்தைகளிடையே காணப்படும், டிப்தீரியா', 'டெட்டனஸ்', கக்குவான் இருமல், காச நோய், இளம் பிள்ளைவாதம், மற்றும் சத்துணவுக் குறைவினால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். குழந்தைகளிடையே, இத்தகைய நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான, வழிமுறைகளைத் தகுந்த நேரத்தில், ஆசிரியர்கள், பெற்றோர்களிடம் கூற வேண்டும். ஆசிரியர்கள் ஒற்றுமையுடனும், உடல் நல ஊழியர்களின் ஒத்துழைப்புடனும், பேச்சுக்கள், படங்கள், விவாதங்கள் ஆகியவற்றின் வாயிலாகக் கிராமங்களிலும் நகரங்களிலும் சிறந்த உடல்நலப் பழக்கங்கள் ஏற்பட திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். கண்காட்சி வாயிலாக நோய்களின் காரணங்களையும், அவற்றைத் தடுக்கும் வழிகளையும் காட்டுதல் வேண்டும். குழந்தைகளுக்கு வழி காட்டும் மருத்துவமனைகள் பெருகவும், அவற்றின் வாயிலாகக் குழந்தைகளின் மனக்கோளாறுகள் நீங்கவும், ஆசிரியர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பெற்றோரிடையே நிலவும் சில மூட நம்பிக்கைகளையும், தவறான நம்பிக்கைகளையும் களைவதற்கான திட்டங்களை ஆசிரியர்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். சிறந்த அறிஞரும், குற்றம் காண்பவருமான பெர்னாட்சா அவர்களே, ''அம்மை குத்துதல் போன்ற தடுப்பு முறைகளை அரைக்காட்டுமிராண்டித்தனமான சடங்கு'' என்று கூறியிருக்கின்றார். அதனால், நோய்களுக்கான காரணங்களைத் தடுப்பதும், சிறந்த உடல் நலப் பழக்கங்களை ஏற்படுத்துவதும், சுற்றுப்புறத் துப்புரவைக் கவனிப்பதும், ஆசிரியர்களுடைய பொறுப்பாகும். மேலும் ஆசிரியர்கள் வரை படங்கள், கற்பித்தல் ஆகியவற்றின் வாயிலாகக் குழந்தைகளுக்கு, நல்ல உடல் நலப் பழக்கங்களைக் காட்டுதல் வேண்டும். அம்மை குத்துதல் வாயிலாகப் பெரியம்மை தடுப்புப் பற்றிய விவரங்கள், அடங்கிய வரைபடங்களைக் காட்டி, பெற்றோர்களும் மாணவர்களும் நன்மை பெறச் செய்ய வேண்டும்.

## 4. கிராம ஏற்பு திட்டம் (Village Adoption Scheme):–

மாணவர்களும், ஆசிரியர்களும், கிராமஏற்புத் திட்டத்தின் வாயிலாகச் சில குறிப்பிட்ட கிராமங்களை ஏற்றுக்கொண்டு படிக்காத பெற்றோர்கள், மற்றும் பொது மக்கள் ஆகியோருக்குக் குழந்தைகள் நோய்களைப் பற்றி விவரித்தல் வேண்டும். அதனால், குழந்தைகளின் இறப்பு விகிதத்தைக் குறைத்து, உடல் நலமிக்க சிறந்த சமுதாயத்தை உருவாக்கலாம்.

## 5. ஆசிரியர் செயல்கள் (Teacher's Activities): –

ஆசிரியர்கள் கீழ்க்கண்டவற்றில் சிறப்பாக பணிபுரிந்தால் குழந்தைகள்பால் விரும்பத்தக்க விளைவுகளை ஏற்படுத்த இயலும்.

1. நோக்கமுள்ள பள்ளி மதிய உணவுத் திட்டம்.
2. பள்ளி உடல் நலக்குழுவை அமைத்தல்.
3. தானாக முன் வந்து உதவும் மருத்துவர்களின் உதவியுடன் பள்ளியில் மருத்துவச் சோதனைக்கு ஏற்பாடு செய்தல்.
4. மருத்துவச் சோதனையின் குறிப்புகளைப் பெற்றோர்களுக்கு அனுப்பி, பின் விளைவுகளைத் தவிர்த்தல்.
5. பெற்றோர்—ஆசிரியர் சங்கங்களில், உடல் நலக் கல்வி பற்றிய கல்வித் துணைப் பொருள்களைப் பயன்படுத்தல்.
6. தொற்று நோய்களைத் தடுக்க, பருவ முறையில் அம்மை குத்தவும், ஊசி குத்தவும் ஏற்பாடு செய்தல்.
7. பள்ளிகளில் காய்கறித் தோட்டம் அமைத்தல்.
8. தானாக முன் வந்து உதவுபவர்களின் உதவியுடன், கழிவிடங்களைப் பள்ளியில் அமைத்தல்.
9. போதிய அளவு உடற்பயிற்சிக்குப் பள்ளியில் வசதி ஏற்படுத்துதல்.
10. குழந்தைகளின் கண்களையும், பற்களையும் கவனித்துப் பாதுகாத்தல்.
11. சுற்றுப் புற ஆரோக்யம், நல்ல உடல் நலப் பழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவை வளர்த்தல்.
12. பாதுகாக்கப்பட்ட குடி நீர் கிடைக்க வழி செய்தல்.

## 6. நடத்தையில் மாறுதல் (Change in behaviour) :–

கற்றலில் மூன்று 'R' கள் என்று கூறப்படுவதை விட, நடத்தையில் மாறுதல் ஏற்படுத்துவதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். மாணவர்களின் உடல் நலத்தைப் பேணுவதால், இதனை அடைய முடியும். முன்னோடித் திட்டமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில், 19 வட்டாரங்களில் (BLOCKS) அமைந்துள்ள 660 பள்ளிகளிலுள்ள 3,461 ஆசிரியர்கட்கு சத்துணவுக் கல்வி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்புத்துணர்வு,



நாளைய தலைமுறை நலமாகவும், வளமாகவும் வாழ மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், கற்பிக்கும் கிராமங்களில், சிறந்த விளைவுகள் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. அனைத்து இந்திய பல் மருத்துவர் சங்கத்தின் உதவியுடன் இவ்வாண்டு சென்னையிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் பயிலும் ஒருஇலட்சம் மாணவர்களுக்குப் பற்களின் பாதுகாப்புப் பற்றிக் கற்பிக்கப்படுகின்றது. பிற்காலத்தில் ஏற்படும், பல் நோய்களைத் தடுக்க இது உதவும். திருநெல்வேலி மாவட்டத்தில், உடல் நலக்கல்வி பற்றிப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயிற்சியுடன் வழிகாட்டும் திட்டங்கள் பல சோதனை முகத்தான் மேற்கொள்ள இருக்கின்றோம். இதனால், தொடக்கத்திலேயே தொற்றுநோய்களைத் தடுக்க இயலும்.

**7. அறிவு நிறைந்த ஆசிரியர்கள்**

சிறந்த உடல் நலப் பழக்கங்கள், சுகாதாரம் ஆகியவற்றைப் பற்றிய அறிவு நிறைந்த ஆசிரியர்களாலேயே, குழந்தைகளின் தொடக்க நிலையில், சூழ்நிலைக்கு ஏற்ப நடத்தை மாறுதல்களை உருவாக்க முடியும். சுற்றுப்புறச் சுகாதாரம் முக்கியமானது; சிறந்த உடல் நலப் பழக்கங்களோடு தொடர்புடையது. குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இதைப் பற்றிக் கற்பித்தல் வாயிலாகப் பல தொற்றுநோய்களைத் தவிர்க்க இயலும். கிராமங்களிலும், நகரங்களிலும் இது முக்கிய பிரச்சினையாகும். தொடக்க நிலையில் அளிக்கப்படும் சிறந்த உடல் நலக் கல்விதான், சத்து உணவுக் குறைவு மற்றும் சுகாதாரமின்மை ஆகியவற்றால் குழந்தைகளிடையே ஏற்படும் பல உடல் நலப் பிரச்சினைகளைத் தவிர்க்க உதவும். இவை பற்றிய நவீன அறிவை ஆசிரியர்கள் பணியிடைப் பயிற்சிகள் மூலம் பெற்றுக் கொள்ள வேண்டும்.



# இறைச்சியினக் கோழிகளும் தட்பவெப்ப நிலையும்!...

தட்பவெப்ப நிலைகளும், காற்றின் வெப்பமும், காற்றின் ஈரத்தன்மையும் இறைச்சியினக் கோழிகளின் உடல் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிய ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு முடிவின்படி அக்டோபர் மாதம் பொரித்து, பிப்ரவரி வரை வளரும் குஞ்சுகள் அதிக வளர்ச்சியையும், அதற்கடுத்து டிசம்பர் மாதம் பொரித்து ஏப்ரல் வரை வளரும் குஞ்சுகள் அதிக வளர்ச்சியையும் அடைவதாகத் தெரியவந்தது. அக்டோபர் முதல் பிப்ரவரி வரை உள்ள பருவ காலத்தில் இறைச்சியினக் கோழிகள் 20 வார வயதில் 1892.5 கிராம் எடையை அடைந்ததாகவும், வார சராசரி எடை அதிகரிப்பு 9·92 கிராம் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மேற்கூறிய பருவ காலத்தின் போது சராசரி காற்றின் வெப்பநிலை 80·2 டிகிரி என்றும் காற்றின் சராசரி ஈரத்தன்மை 66·9% என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

**

# தட்பவெப்ப நிலையும் கோழியின் முட்டை உற்பத்தியும்

காற்றின் வெப்பநிலை 82° பாரன்ஹீட் டிகிரிக்கு அதிகமானால் கோழியின் உடல்நிலை பாதிக்கப்பட்டு முட்டையின் எண்ணிக்கையும், எடையும் குறைகின்றன, என்று ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, கோழிகளுக்கு அமைக்கப்படும் இருப்பிடம் காற்றின் வெப்பத்தைத் தணிக்கக் கூடிய வசதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது. காற்றின் ஈரத் தன்மை, காற்றின் வெப்பநிலை 74·5° முதல் 89·0° டிகிரி வரை இருக்கும் போது கோழியின் ஆரோக்கியத்தை இது பாதிப்பதில்லை. இதனால் முட்டையின் எண்ணிக்கையும், எடையும்கூட பாதிக்கப்படுவதில்லை என்று தெரிய வருகிறது.

**

தகவல் : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.



# சித்தேரி மலைவாழ் மக்களுக்கு வனத் துறை செய்திடும் நன்மைகள்

—க. க. சோமசுந்தரம், ஐ.எப்.எஸ்.
மாவட்ட வன அலுவலர்,
தருமபுரி.

**சி**த்தேரி மலை என்பது தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டத்தில், அரூர் நகரிலிருந்து இருபத்தாறு கிலோ மீட்டர் தூரம் தெற்கில் அமைந்துள்ளது. இம்மலைக்குச் செல்ல அரூரிலிருந்து வனத்துறையால் 1897-ஆம் ஆண்டு போடப்பட்ட சாலை உள்ளது. இச்சாலை அந்நாளிலிருந்து இன்றுவரை வனத்துறையால் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. சித்தேரி மலையின் மொத்தப் பரப்பு 400 சதுர கிலோ மீட்டராகும். இம்மலையில் மொத்தம் 44 கிராமங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான கிராமங்களில் மலை ஜாதியினர்தான் வசிக்கின்றனர். சித்தேரி கிராமம்தான் இவ்வெல்லாச் சிற்றூர்களுக்கும் தலைமையிடம் போல் விளங்குகிறது. சித்தேரி ( Chitteries ) என்று குறிப்பிடுவது பொதுவாக அம்மலையில் அடங்கியுள்ள எல்லா கிராமங்களையும் குறிக்கும். சித்தேரி மலை, பள்ளத் தாக்குகளும் மலைகளும் நிறைந்தது. இதன் சராசரி உயரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் மூவாயிரம் அடி. வருடம் முழுவதும் தட்பவெப்ப நிலை மிதமாக உள்ளது. 'போட்டுமலை' என்ற மலை முகடுதான், சித்தேரி மலையிலேயே மிக அதிகமான உயரம் (4182 அடி) உடையது. சித்தேரி மலையிலுள்ள எல்லா கிராமங்களிலும் 'மலையாளி' என்று கூறப்படுகிற மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர் இம்மலையிலுள்ள மலைவாழ் மக்களின் எண்ணிக்கை சுமார் இருபத்தொன்மூன்றாயிரம் ஆகும். எல்லா கிராமங்களும் காடுகளால் சூழப்பட்டுள்ளன. சித்தேரியிலிருந்து சுமார் 9 கிலோ மீட்டர் தூரத்திற்கு நொச்சிக்குட்டைக்கும், சூர்யகடை, புதூர், வெலாம்பள்ளி ஆகிய ஊர்களுக்கும் சித்தேரியை இணைத்து வனத் துறையால் வறட்சி மீட்புத் திட்டத்தின்கீழ், நல்ல சாலைகள் போடப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களை 'ரோடு கேங்' கூலிகளாக வைத்து இச்சாலைகளை வனத் துறையினர் நன்கு பராமரித்து வருகின்றனர். மேலும் சித்தேரியிலிருந்து மன்னூர், மாங்கடை, கலசப்பாடி ஆகிய ஊர்களுக்கும் இன்னும் பல சிறு ஊர்களுக்கும் சாலை அமைக்க மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வனத்துறையால் தயாரிக்கப்பட்ட திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. அரூரிலிருந்து சித்தேரி வரை இப்பொழுது பஸ் வசதி கிடையாது. ஆகவே 'ஜீப்வேன்' அல்லது வேறுவகை சிறிய வாகனங்கள் விடும் வகையில், 26 கிலோ மீட்டர் ரோடும் மலைவாழ் மக்களையே 'கேங்' கூலிகளாக வைத்து நன்கு பராமரித்துச் சீர்படுத்தப்படுகிறது.

## 'லாம்ப்' பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்தைக் கருதி தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்ட ஏழு 'லாம்ப்' ( Lamp ) கூட்டுறவு சங்கங்களில் ஒன்று சித்தேரியில் அமைக்கப்பட்டுள்ளது. 'லாம்ப்' சங்கம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர், சித்தேரி மலைப் பகுதிகள் அடங்கிய அரூர் வனச்சரகத்தைச் சேர்ந்த வனச்சரகர்தான் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். மலைவாழ் மக்கள் வனத்தின் ஊடேயே வசித்து, வனங்களினூடே ஒன்றியுள்ளதால் அவர்களின் முழுமையான தேவைகளை அறிந்து அவர்களுக்கு நன்மை செய்ய தர்மபுரி மாவட்ட வன அலுவலரும் 'லாம்ப்' சங்கத்தின் ஓர் இயக்குநராக அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## சித்தேரி மலைவாசிகள் பற்றிய குறிப்பு

சேர்வராயன், கொல்லிமலை, கல்ராயன் மலை, பச்சமலை முதலிய மலைவாழ் மக்கள் போலவே சித்தேரி மலைவாசிகளும் 'மலையாளி' என அழைக்கப்படுகின்றனர். மலைகளில் வாழ்வதாலேயே 'மலையாளி' என அழைக்கப்படுகின்றனர். இவர்களை தோடர்கள், குரும்பர்கள், பனியர்கள் போல மலை ஜாதியினர் ( Hill Tribes ) எனக் கொள்ளலாகாது. திப்புசுல்தான் தெற்கில் படையெடுத்தபொழுது, இவர்கள் காஞ்சிபுரத்திலிருந்து இங்கு வந்ததாக நம்பப்படுகிறது. இவர்கள் தங்களை 'வெள்ளாளர்' இனத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக் கொள்கிறார்கள். தங்கள் பெயருக்குப் பின்னர் 'கவுண்டர்' என்ற அடைமொழியை உபயோகப்படுத்திக் கொள்வதில் பெருமைப்படுகிறார்கள். தமிழைத்தான் தாய்மொழியாகப் பேசுகிறார்கள். இவர்கள் கீழ்நாட்டிலிருந்து சித்தேரி மலைக்கு வந்ததை வேறு பல விதமாகவும் கூறுகிறார்கள்.

சித்தேரி மலைவாழ் மக்கள் இந்துக்கள். இந்துக்கடவுள்களின் பெயரைச் சூட்டிக் கொள்கிறார்கள். சிவன், விஷ்ணு, காளி, பிடாரி மாரியம்மன் முதலிய தெய்வங்களை வழிபடுகிறார்கள். கூரையில்லாத கோவில்களில் அல்லது திறந்த வெளியில் வழிபாடு நடத்துகிறார்கள். 'ஆண்டி' என்று சொல்லப்படும் பூசாரி, வழிமுறையாக ( Hereditary ) வருபவர். தீபாவளி, பொங்கல் இவைதான் இவர்களுக்கு முக்கிய




# ஸ்டேட் பாங்க் ரிக்கரிங் டெபாஸிட் திட்டம்

## மாதந்தோறும் சேமிக்கும் பழக்கம்—நாளை நலன் தரும்.

ஒவ்வொரு மாதமும் எத்தனை சேமிக்க வேண்டும், மற்றும் எத்தனை காலம் சேமிக்க முடியும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஆரம்பித்தவுடன், உங்கள் சேமிப்பு வட்டியுடன் வளரும் வேகத்தைக் கண்டு மலைத்துப் போவீர்கள்.

இன்னும் எளிதாக்க வேண்டுமானால், ஸ்டேட் பாங்கில் ஒரு சேமிப்புக் கணக்கு ஆரம்பியுங்கள். மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை உங்கள் ரிக்கரிங் டெபாஸிட் கணக்கில் மாற்றும்படி உங்கள் ஸ்டேட் பாங்க் கிளைக்குக் கூறி விடவும்.

வசதியான காலவரையறைக்கு, ரூ. 5/-ன் மடங்கில் நீங்கள் சேமிக்கலாம். வட்டி விகிதம் ஆண்டொன்றுக்கு வருமாறு: 12,24 மற்றும் 36 மாதங்களுக்கு 6%, 37,48, மற்றும் 60 மாதங்களுக்கு 8%, மேலும் 61,72,84,96, 108 மற்றும் 120 மாதங்களுக்கு 10%.

இன்னும் என்ன? நீங்கள் போகுமிடமெல்லாம் உங்கள் பணமும் கூடவே வரும். காரணம், இந்தியாவில் 4,200க்கும் மேற்பட்ட வெவ்வேறு இடங்களில் உங்களுக்கு சேவை புரிகிறது ஸ்டேட் பாங்க்.

**ஸ்டேட் பாங்க்**

அதிகமாக மரங்கள் வளருங்கள்



சித்தேரி மலைவாழ் மக்கள் தானியங்களை வட்டமான குதிர்களில் சேர்த்து வைக்கின்றனர்.

விழாக்கள். இவர்கள் மாட்டுப் பொங்கலை விமரிசையாகக்கொண்டாடி, காட்டுக்கு வேட்டைக்குப் போவதுண்டு. வேட்டைக்குப் போவது இப்பொழுது பெரும்பாலும் குறைந்துவிட்டது. சித்தேரி மக்களின் முக்கிய தொழில் விவசாயம்; ஆடு, மாடு, பன்றி முதலியவையும் வளர்க்கின்றனர். ராகி, வரகு, சோளம், சாமை, மலைநெல் முதலியவையும் பருப்பு வகைகள், மிளகாய், ஆமணக்கு முதலியனவும் பயிரிடுகின்றனர். சோளம், வரகு, ராகி ஆகியவற்றை விரும்பிச் சாப்பிடுகின்றனர்.

## சித்தேரி மக்களின் பொருளாதார நிலை

சித்தேரி மலைவாழ் மக்கள் மிகவும் ஏழைகளாகவும், கடன் பட்டவர்களாகவும் உள்ளனர். அவர்களது நிலங்களிலிருந்து கிடைக்கும் வருமானம் போதுமானதாக இருப்பதில்லை. ஆகவே, வனத்துறையில் மேற்கொள்ளப்படும் சந்தன மரங்கள் பெயர்த்தெடுத்தல், மூங்கில் வெட்டுதல், கடுக்காய், புளி, தேன் முதலிய வனப்பொருள்கள் சேகரம் செய்தல் முதலிய வேலைகளில் ஈடுபட்டுத் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்கிறார்கள். தங்கள் சொந்த நிலங்களிலுள்ள கடுக்காய், புளி, பலா ஆகிய பொருள்களை முன்கூட்டியே அடமானம் வைத்து விடுகின்றனர். கீழ் நாட்டிலுள்ள சிலர், புளி, கடுக்காய் ஆகியமரங்களின் பாத்தியதையைப் பல ஆண்டுகளுக்கு வாங்கிக் கொண்டுள்ளார்கள். ஆகையால் இம்மக்கள் எப்போதும் கடன் பட்டே உள்ளார்கள். வழக்கமாக திருமணம் முதலிய சடங்குகளைக் கடன் வாங்கியே நடத்துகிறார்கள். அவர்கள்வளர்க்கும் மாடுகளும் மிகவும் தரம் குறைந்ததாகவே உள்ளது. வீரியம் குன்றிய விதைகளையே உபயோகிப்பதாலும், இரசாயன உரமிடுதல், கரைகள் கட்டி மண் வளப்பாதுகாப்பு செய்தல் ஆகிய மேம்பாட்டு வேலைகளைச் செய்யாததாலும் இவர்களுக்கு விவசாயத்தில் கிடைக்கும் வருமானம் மிகவும் குறைவாகவே உள்ளது. விளை பொருள்களை வாரச் சந்தைகளுக்குக் கொண்டு சென்று, கிடைக்கும் விலைக்கு விற்றுவிடுவதால், எப்பொழுதும் கையில் பணம் இல்லாத ஏழ்மை நிலையிலேயே இருந்துள்ளனர். இவர்கள் உணவிற்கும், விதைகளுக்கும் தேவையான தானியங்களை ஊரின் ஒரு புறத்தில் வட்டமான 'தானியக் குதிர்களில்' சேமித்து வைக்கின்றனர். தானியக்குதிர்களின் கூரைகள் புற்களால் வேயப்பட்டிருக்கும். குதிர்களின் அடிப்பாகமும், பக்கங்களும் மூங்கில் தட்டிகளால் பின்னப்பட்டு, பின்னர் மண்ணால் பூசப்பட்டிருக்கும். குதிரின் பக்கவாட்டில் தானியம் எடுக்கவும், கொட்டவும் ஒரு துவாரம் உண்டு.

## வனவிலங்குகள்

சித்தேரியில் யானை, புலி கொடிய மிருகங்கள் ஒருபோதும் இருந்ததில்லை. சிறுத்தை இனம் ஒரு காலத்தில் இருந்ததாகவும், அவை அழிக்கப்பட்டுவிட்டன என்றும் கூறப்படுகிறது. மலையாளிகள் வனவிலங்குகளையோ பறவைகளையோ வலைகள் வைத்தோ, கண்ணி வைத்தோ பிடிப்பதில்லை. சித்தேரி மலையில் புள்ளிமான், கடமான், காட்டெருமை முதலிய விலங்குகள் உள்ளன. காட்டெருமைகளைச் சுடுவதோ அல்லது அவற்றின் மாமிசத்தைச் சாப்பிடும் பழக்கமோ அவர்களுக்குக் கிடையாது. வனங்களினூடே வசிப்பதால் மலையாளிகளின் பொது நன்மைகளைக் கருதி ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்க் கவுண்டர் அல்லது நாட்டானுக்கு மட்டும் துப்பாக்கி உரிமம் வழங்க ஆட்சேபணை இல்லையென வனத்துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சித்தேரி மக்களுக்கு வனத் துறையால் அளிக்கப்படும் நன்மைகள் :—

1. சித்தேரி மக்கள் தங்கள் ஆடு, மாடுகளை வனங்களில் மேய்ச்சல் அனுமதிச்சீட்டு இல்லாமல், இல-

வசமாக ஆண்டு முழுவதும் மேய்த்துக் கொள்ளலாம்.

2. வனங்களிலிருந்து கூரைகள் வேய மூங்கில், புல் மற்றும் மரத் துண்டுகளையும் இலவசமாக வெட்டிகொள்ளலாம். விவசாயக் கருவிகளான கலப்பை, தடி ஆகியவைகளையும் வனங்களில் வெட்டி எடுத்துக் கொள்ளலாம். மேற்கண்ட வசதிகளை அனுபவிக்க அவர்கள் வனத்துறையினரின் கீழ்க்கண்ட முக்கிய நிபந்தனைகளைப் பின்பற்றவேண்டும்.

1. காப்புக்காடுகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவர்கள் வெள்ளாடுகள் வளர்க்கக்கூடாது.

2. பாதுகாப்புக் காட்டில் வளரும் சந்தனம், மூங்கில் மற்றும் இதர செடிகளைப் பாதுகாப்பதின் பொருட்டு தங்களுக்குச் சொந்தமில்லாத கீழ்நாட்டவரின் கால்நடைகளை வளர்க்கக் கூடாது.

3. தங்கள் கிராமங்களைச் சுற்றியுள்ள காடுகளில் உள்ள சந்தன மரங்களையும், இதர வனப்பொருள்களையும் திருட்டிலிருந்தும், தீயிலிருந்தும் பாதுகாத்தல் வேண்டும்.

4. வனத்துறையினர், கீழ்நாட்டிலிருந்து ஆட்கள் கொண்டு வந்து வேலை செய்ய இயலாததால், அவர்களால் செய்யப்படும் சந்தனமரம் பிடுங்குதல், செடிகள் வளர்த்தல், மரம் வெட்டுதல், சாலை போடுதல் ஆகிய வேலைகளை முன் வந்து செய்ய வேண்டும். தக்க கூலி வழங்கப்படும்.

5. கொடுக்கப்பட்ட காப்புக் காடுகளில் சந்தன மரத் திருட்டுக்கள் ஏற்பட்டாலோ அல்லது காடுகளைத் தீயிலிருந்து பாதுகாக்கத் தவறினாலோ மேய்ச்சல்வைப்புத் தொகையிலிருந்து தக்க தொகை பிடித்தம் செய்யப்பட்டு பாக்கி ஊர்க்கவுண்டர் வசம் ஒப்படைக்கப்படும். இதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாத இறுதியில் ஒவ்வொரு ஊர்க் கவுண்டராலும் மாவட்ட வன அலுவலகத்தில் வைப்புத் தொகை கட்டப்படுகிறது. சித்தேரி மலைவாழ் மக்கள், காடுகளைத் தீயிலிருந்தும், திருட்டுக் களிலிருந்தும் ஒவ்வொரு ஆண்டும் மிகவும் கவனமாகப் பாதுகாத்து வனத்துறையினருக்கு உறுதுணையாக உள்ளனர். வனத்துறையால் மேற்கொள்ளப்படும் எல்லா வகை வேலைகளையும் முன் வந்து செய்கின்றனர். ஆகவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டம் நன்கு செயல்பட்டு வருகிறது. காடுகளை தீயின்று காப்பாற்றும் கிராம மக்களுக்கு ஊர்க்கவுண்டர் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வன அலுவலரால் பரிசு வழங்கப்படுகிறது.

## சித்தேரி மக்களுக்கு வனத்துறையால் அளிக்கப்படும் வேலைவாய்ப்பு...

### சந்தனமரம் பிடுங்குதல்

சித்தேரியில் வளரும் சந்தன மரம் நல்ல தரமானதாகவும், விலை உயர்ந்ததாகவும் உள்ளது. சராசரியாக ஒரு டன் ரூபாய் ஐம்பதாயிரத்துக்கு விற்பனையாகிறது. காய்ந்து, உலர்ந்த, சந்தன மரங்களே வனத்துறையினரால் வேரோடு பிடுங்கப்பட்டு சேலம் சந்தன மரக்கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. அங்கு சந்தன மரங்களைச் சுத்தம் செய்து பின்னர் சத்திய மங்கலம் அனுப்பப்பட்டு, ஆண்டுக்கு இருமுறை விற்பனை செய்யப்படுகிறது. சராசரியாக சித்தேரி மற்றும் சுற்றுமுள்ள காடுகளில் மட்டும் நூறு முதல் நூற்றைம்பது டன் வரையுள்ள சந்தன மரங்கள் பிடுங்க வாய்ப்புள்ளது. இம்மரங்களைப் பிடுங்குதல், காடுகளிலிருந்து மத்திய கிடங்கிற்குக் கொண்டு வருதல், லாரிகளில் ஏற்றுதல் முதலான வேலைகள் முழுவதையும் மலைவாசிகள்தான் செய்கின்றன. இவ்வேலை சராசரியாக வருடம் முழுவதும் உள்ளது.

### சாலைகள் பராமரித்தல்

அரூரிலிருந்து சித்தேரி மற்றும் நொச்சிக்குட்டை, கத்திரிப்பட்டி கம்பாலை மற்றும் சூர்யகடை, வெலாம்பள்ளி முதலிய ஊர்களுக்குச் செல்லும் மொத்தம் எழுபத்தைந்து கிலோ மீட்டர் நீளச்சாலைகளும் மலைவாசிகளாலேயே 'கேங்' கூலி என்ற திட்டத்தின்கீழ் பராமரிக்கப்படுகிறது. சுமார் முப்பது மலைவாசிகள் இத்திட்டத்தின் கீழ் தினமும் வேலை செய்கின்றனர். புதிதாகப் போடப்படும் சாலைகள்

முதிர்ந்து காய்ந்த சந்தன மரங்களைப் பிடுங்கி எடுத்துவரும் பணிகளை, வனத்துறைக்காக, சித்தேரி மலைவாழ் மக்களே செய்கின்றனர்.






சித்தேரி மலைவாழ் மக்களால் விளைவிக்கப்படும் கடுக்காய்கள் 'லாம்ப்' கூட்டுறவுச் சங்கத்தால் வாங்கப்படுகின்றன. 'லாம்ப்' சங்கத்தினரால் மலையில் விளையும் சிறு பொருள்கள் அனைத்தும் மாவட்ட வன அலுவலரால் வாங்கப்படுகின்றன.

மலைவாசிகளாலேயே செய்யப்படுகின்றன.

### மூங்கில் மற்றும் சந்தனத் தோட்டங்கள் போடுதல்

சித்தேரியில் சந்தனமரம் நன்ருக வளருவதால், அங்கு ஆண்டுதோறும் சுமார் 40 ஏக்கர் பரப்பில் புதிதாகச் சந்தன நாற்றுக்கள் நடப்படுகின்றன. மேலும் தீவிர சந்தன உற்பத்தித் திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் சுமார் 300 ஏக்கர் பரப்பில் சந்தன நாற்றுக்களின் பராமரிப்பு செய்யப்படுகிறது. செடிகளுக்கு குழி வெட்டுதல், செடி நடுதல், களையெடுதல் ஆகிய அனைத்து வேலைகளும் மலைவாசிகளாலேயே செய்யப்படுகின்றன. இவ்வாண்டில் 125 ஏக்கர் பரப்பில் மூங்கில் நடப்பட்டு வருகிறது.

### கிணறு, நாற்றங்கால் மற்றும் தண்ணீர் வசதி

சித்தேரி மலைவாழ் மக்கள் திட்டத்தின் கீழ் (Tribal Scheme), வனத்துறையால் ஒரு கிணறு வெட்டப்பட்டு, மேல்நிலைத் தொட்டிகட்டப்பட்டு, பம்பு செட்டு பொருத்தப்பட்டு வருகிறது. அருகிலுள்ள பள்ளிக்கும் தண்ணீர் வசதி செய்துதர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதே திட்டத்தின் கீழ், மலைவாசிகளுக்கு இலவசமாகச் செடிகள் வழங்க வனத்துறை நாற்றங்காலில் புளி, பலா, மாதுளை, கொய்யா, பப்பாளி, எலுமிச்சை முதலிய பழவகைச் செடிகளும். தேக்கு, மூங்கில், 'யூகாலிப்ட்ஸ்', 'சில்வர்ஓக்' போன்ற மரவகைச் செடிகளும் எழுப்பப்பட்டுள்ளன. இவ்வாண்டு மட்டும் இருபதாயிரம் செடிகள் இவ்வாறு இலவசமாக வழங்கப்படும். அத்துடன் அவைகளை நடுதல், பராமரித்தல் பற்றிய விவரங்களும் வனத்துறையால் எடுத்துச் சொல்லப்படும்.

### தங்கும் விடுதி

சித்தேரி மலை சமவெளியிலிருந்து மிகவும் தொலைவில் உள்ளதால் அங்கு அரசாங்க அலுவலர்களும், ஏனையோரும் சென்று பல அலுவல்களை முடிக்க அங்கு அவசியம் தங்கியாக வேண்டும். மேலும் பெரும்பாலான கிராமங்களுக்குச் சித்தேரி சென்று, அங்கிருந்துதான் செல்ல வேண்டும். ஆகவே, இவற்றைக் கருத்தில் கொண்டு வனத்துறையினரால் அங்கு ஒரு தங்கும் விடுதி கட்டுவதற்காக ரூபாய் அறுபதாயிரம் செலவிட, அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வேலை துவங்கும் தறுவாயில் உள்ளது.

### சித்தேரி கால் நடைகளுக்கு தண்ணீர் வசதி

சித்தேரியிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள ஏராளமான கால்நடைகளுக்குத் தண்ணீர் வசதி செய்து கொடுக்க வனத்துறையால் திட்டங்கள் அனுப்பப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு இரண்டு இடங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. வறட்சி மீட்புத் திட்டத்தின் கீழும் (D.P.A.P.) இவ்வாண்டு இவ்வாறன வேலைகள் மேற்கொள்ளப்படும்.

### குமரி முறையில் சாகுபடி செய்ய நிலம் வழங்குதல்

சுமார் 100 ஏக்கர் நிலத்தில் குளக்குரிச்சி மற்றும் சித்தேரிக்கு அருகாமையில் சந்தனம் மற்றும் மூங்கில் தோட்டங்களில் 'குமரி' சாகுபடி செய்ய மலைவாசிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு நிலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சித்தேரி 'லேம்ப்' கூட்டுறவு சங்கத்தின் மூலமாக, 'குமரி' சாகுபடி செய்ய கடன் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

### வன சிறு மகசூல்களை 'லாம்ப்' சங்கத்துக்கு ஒதுக்குதல்

வனங்களில் விளையும் பலவகையான சிறு மகசூல்களான புளி, கடுக்காய், சிகைக்காய், நெல்லி, எட்டி, கறிவேப்பிலை மற்றும் பல வகையான பழவகைகள், வேர்கள் தேன் மற்றும் ஏராளமான சிறு மகசூல்களை நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு 10 சதம் குறைத்து கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்க மாவட்ட வன அலுவலர்களை அரசு அனுமதித்துள்ளது. மலைவாழ் மக்களை 'கண்ட்ராக்டர்'கள் சுரண்டி பணம் பறிக்காமல் இருக்கவும், இவர்களுக்கு நேரிடையாக கூட்டுறவுச் சங்கம் மூலம் வேலை கொடுக்கவும் சித்தேரியில் உள்ள முப்பத்தேழு வகையான வன விளை பொருள்களும் 'லாம்ப்' சங்கத்துக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. இனிமேல் எல்லா வகையான சிறு மகசூல்களும் 'லாம்ப்', சங்கத்துக்கு ஒதுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் தமிழ்நாடு அரசு, மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கல்ராயன்மலை, கொல்லிமலை, ஜவ்வாது மலை, பச்சமலை, சித்தேரிமலை, அரனூத்துமலை முதலிய பின் தங்கிய இடங்களில் வசிக்கும் மக்களுக்காக ரூபாய் 1.53 கோடி ஒதுக்கியுள்ளது. ஏழு இடங்களில் ஏற்கெனவே 'லாம்ப்' கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையாக இயங்கி வருகின்றன. இன்னும் ஐந்து 'லாம்ப்'கள் ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டியுள்ளது. இந்த 'லாம்ப்'களின் மூலம் மலைவாழ் மக்கள் தங்கள் வாழ்வின் 'ஒளி'யைக்காண்பார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.





# படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள், கடலூர் சேவை இல்லத்திற்காக ரூபாய் 2 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை, 6-10-1977 அன்று திறந்து வைத்தார். சமூகநலத்துறை இயக்குநர் திருமதி லட்சுமி பிரானேஷ் அவர்களும், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. எஸ். பத்மநாபன் அவர்களும் மேலேயுள்ள படத்தில் காணப்படுகின்றனர்.



குடும்ப நல இருவார விழாவை முன்னிட்டு சென்னையில் 10-10-1977 அன்று 'இளைஞர் நாள்' விழா நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமை வகித்தார். மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் இளைஞர் நாள் விழா வைத் துவக்கி வைத்தார். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் இவ்விழா வில் கலந்து கொண்டார்.



மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில மரம் நடும் குழு வின் கூட்டம், 12-10-1977 அன்று, சென்னை ராஜ் பவனில் நடைபெற்றது. அவ்வமயம் ஆளுநர் அவர்கள் ராஜ்பவன் தோட்டத்தில் ஒரு மாங்கன்றை நட்டார்.



மாண்புமிகு தமிழ்நாடு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள், 18-10-1977 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில், ''நாடாளு மன்றத்தின் வரலாறு'' என்ற பொருட்காட்சியைத் துவக்கி வைத்துப் பார்வையிட்டார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களை, 19-10-1977 அன்று, மாண்புமிகு ஆந்திரப் பிரதேச சிறுதொழில் அமைச்சர் திரு ஒய். நாராயணசாமி அவர்கள் சந்தித்து உரையாடினர்.

மாண்புமிகு பீகார் மாநில சுற்றுலா-அறக்கட்டளைத் துறை அமைச்சர் திரு மோகன்ராம் அவர்கள், 19-10-1977 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களைச் சந்தித்து உரையாடினர்.







திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பெண்ணலூரில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி கட்டடத்தை, 20-10-1977 அன்று, மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் திறந்து வைத்தார்.



தமிழ்நாட்டிற்கு 20-10-1977 அன்று வருகை தந்த மெக்சிகோ நாட்டுக் குடியரசுத் தலைவரின் துணைவியார் திருமதி போர்ட்டில்லோ அவர்களை, சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், மாண்புமிகு தமிழ்நாடு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் மாலையணிவித்து வரவேற்றார்.

# கூட்டுறவுப் பயிற்சிக்கு ஒரு கல்லூரி

கூட்டுறவு இயக்கம் இன்று தமிழ்நாட்டு நகரங்களில் மட்டுமல்ல—கிராமங்களிலும் இயங்கி வருகிறது. அதனால் நாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. இந்திய நாட்டின் கூட்டுறவு இயக்கத்தில் தமிழ்நாடு மிகப் பெரும் இடத்தைப் பெற்றிருக்கிறது. கூட்டுறவு இயக்கம் மிக வலுவான ஓர் இயக்கமாக—சமூக, பொருளாதாரத் துறையில் புகழ் பெற்ற இயக்கமாக விளங்குகிறது ; பொது மக்களுக்கு நல்ல சேவை செய்து வருகிறது.

கூட்டுறவு இயக்கம் முதன் முதலில் ஜெர்மனி நாட்டில் ரெய்பீசன் என்பவரால் துவக்கம் செய்யப்பட்டது. 1899ஆம் ஆண்டில் சர் பிரடரிக் நிக்கல்சன் என்பவர், இந்த இயக்கத்தை இந்திய நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். 1904ஆம் ஆண்டு இவ்வியக்கம் தமிழ்நாட்டில் தோன்றியது.

துவக்கத்தில் ஏழை விவசாய மக்களின் வறுமையைப் போக்குவதற்குக் கடன் கொடுத்து உதவுவதே இந்த இயக்கத்தின் குறிக்கோளாக இருந்தது. பின்னர் படிப் படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்தது.

இன்று, கூட்டுறவு இல்லாத துறையே இல்லை. வேளாண்மை, தொழில், கால்நடை வளர்ப்பு, கைத்தறி, பால் வளம், கிராமத் தொழில், வீட்டு வசதி இப்படிப் பலப்பல துறைகளிலும் கூட்டுறவு என்னும் குளிர் தென்றல் வீசி வருகிறது.

எனவே, கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளிலும் பணி புரிவோர், தங்களது பணியைத் திறம்பட நடத்துவது மிக அவசியம் அல்லவா? கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறைகள், விதி முறைகள் ஆகியவற்றை அவர்கள் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததல்லவா? இந்தத் திறமைகள் எல்லாம் அவர்களிடம் ஒளி வீசித் திகழ்வதற்குரிய ஒப்பற்ற பணியைச் செய்து வருகிறது, சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி.

இந்திய நாடு முழுவதும் இது போன்ற கல்லூரிகள் மொத்தம் 16 இருக்கின்றன. சென்னையில் உள்ளது போல, பெங்களூர், புவனேஷ்வர், சண்டிகர், டேராடூன், கௌஹாத்தி, ஐதராபாத், இந்தூர், கல்யாண், ஜெய்ப்பூர், லக்னோ, நாகபுரி, பாட்னா, பூனா, வி.வி. நகர் (குஜராத்), திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகள் உள்ளன.

ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த கூட்டுறவு மையக் குழு 1954ஆம் ஆண்டில் நாட்டின் பல்வேறு பாகங்களில், வட்டாரக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களை ( Regional Co-operative Training Centres ) உருவாக்கியது. பின்னர், இதன் நிருவாகம், 1962ஆம் ஆண்டில் தேசிய கூட்டுறவு ஒன்றியத்திற்கு (National Co-operative Union of India) மாற்றம் செய்யப்பட்டது. அப்போது வட்டாரம் என்னும் சொல் நீக்கம் செய்யப்பட்டு, 'கூட்டுறவுப் பயிற்சி நிலையம்' என வழங்கப்பட்டது. 1967ல் 'கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி' எனப் பெயரிடப்பட்டது.

புது டில்லியிலுள்ள தேசியக் கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் ( National Council for Co-operative Training ) நேரடி நிர்வாகத்

மாவட்ட இளநிலை கூட்டுறவுப் பயிற்சி நிலைய முதல்வர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் நடத்தப் பெற்ற குறுகிய காலப் பயிற்சியில் பங்கேற்றவர்கள்.





''வைப்புத் தொகை சேகரிக்கும் முறை'' என்ற பயிற்சித் திட்டத்தின்கீழ், பயிற்சியாளர்கள், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வேளாண்மை விரிவாக்க அலுவலரிடம் நேரடியாகத் தகவல் சேகரிக்கின்றனர்.

தில் இந்தக் கல்லூரி உள்ளது. இதற்குரிய நிதியை, மத்திய அரசின் உணவுப் பொருள் விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சகம், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவின் மூலம் வழங்கி வருகிறது. பயிற்சி முறைகள் குறித்த கொள்கைகளும், நிர்வாகமும், மேற்குறிப்பிட்ட குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றன. கல்லூரியின் அன்றாட நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் ''சிறப்புக் கூட்டுறவுப் பயிற்சிக் குழு'' என்னும் ஒரு தனிக் குழு, சென்னை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவர்தான் இந்தக் குழுவுக்கும், தலைவராக இருக்கிறார். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர், தமிழ்நாடு மாநில நிலவளக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னையிலுள்ள மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தின் முதல்வர் ஆகியோர் இச்சிறப்புக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக இருக்கின்றனர். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி முதல்வர், உறுப்பினர் அமைப்பாளராக இருக்கிறார்.

இக்கல்லூரியின் பாடத் திட்டம், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழுவிற்கு அனுப்பப்படுகிறது. அக் குழு பாடத் திட்டத்தைப் பார்வையிட்டு, ஒப்புதல் தருகிறது. தேவைப்பட்டால் திருத்தமும் செய்கிறது. பின்னர், 'டிப்ளமா' பட்டம் தருகிறது. சுருங்கச் சொன்னால், தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழு ஒரு தேசிய நிறுவனமாகச் செயலாற்றித் தொழில் நுட்ப உதவியைத் தருகிறது ; வழிகாட்டுகிறது. இதன் மூலம் இந்திய நாடு முழுதும் இந்தத் தரமான திட்டம் அமலாக்கப்படுகிறது.

இக்கல்லூரியின் குறிக்கோள்கள் வருமாறு :

1. தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் உள்ள கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அலுவலகங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவற்றின் பயிற்சித் தேவைகளை மதிப்பிடுதல்.

2. நடுநிலை வகையைச் சேர்ந்த கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரிபவர்களுக்குக் கூட்டுறவுப் பயிற்சியினை நடத்துதல்.

3. பயிற்சியின் விளைவுகளை மதிப்பிடுதல்.

4. கூட்டுறவுத் துறை மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை நேரில் சென்று பார்த்து, அதன் பணிகளின் பலன்களை ஆய்ந்து பார்த்தல்.

5. கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கருத்துரை வழங்கும் பணியை மேற்கொள்ளுதல், ஆகியவை ஆகும்.

இக் கல்லூரி நான்கு வித 'டிப்ளமா'ப் பயிற்சிகளையும், பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது. பொதுவாக, பட்டதாரிகள்தான் 'டிப்ளமா' பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

''டிப்ளமா'' பயிற்சிகளாவன : உயர் நிலை கூட்டுறவு டிப்ளமா ( Higher Diploma Course in Co-operation ), கூட்டுறவு வங்கித் தொழில் 'டிப்ளமா' (Diploma in Co-operative Banking), கூட்டுறவுத் தணிக்கை 'டிப்ளமா' ( Diploma Course in Co-operative Audit ), கூட்டுறவுத் தொழில் துறை 'டிப்ளமா' (Diploma Course in Industries Co-operative).

**உயர்நிலை கூட்டுறவு 'டிப்ளமா' பயிற்சி :**

36 வார காலம் கொண்ட இப் பயிற்சி, கூட்டுறவுத் துறை பற்றிய எல்லாச் செய்திகளையும் ஓரளவு அடிப்படைக் கருத்தாக அறிந்து கொள்வதற்குப் பயன்படும். இது, பெரும்பாலும் கூட்டுறவு இயக்கத்தில் புதிதாக நுழைவோருக்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையில் புதிதாகப் பணியைத் துவக்கிடும் முது நிலை ஆய்வாளர்கள் ( Senior Inspectors ), அவர்களைவிட உயர்ந்த பதவியிலுள்ள சார் பதிவாளர்கள், துணைப் பதிவாளர்கள் மற்றும் நடுநிலை அலுவலர் வகையைச் சார்ந்த, மையக் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த நடுநிலை அலுவலர்கள் ஆகியோர் இந்தக் கல்லூரியின் பயிற்சி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்தப் பயிற்சி, கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு துறைகளையும் தழுவியதாக

உள்ளது. அவையாவன : (1) கூட்டுறவுத் துறையின் கொள்கைகள், வரலாறு மற்றும் திட்டமிடப்பட்ட வளர்ச்சி ; (2) கூட்டுறவுக் கடன் மற்றும் வங்கிப் பணி; (3) கடன் வழங்காத கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு முறை மற்றும் வேலை முறை; (4) கூட்டுறவுச் சட்டம் மற்றும் அதன் சார்பான இதர சட்டங்கள்; (5) கூட்டுறவுக் கணக்குகள்; (6) கூட்டுறவுத் தணிக்கை; (7) கூட்டுறவு மேலாண்மையின் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நிர்வாகம்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, அந்தமான் நிகோபார் தீவு, லட்சத் தீவுகளைச் சேர்ந்தவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்த 'டிப்ளமா' பயிற்சி அமைக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு வங்கித் தொழில் 'டிப்ளமா' :**

இது 16 வார காலப் பயிற்சி கொண்டது. கூட்டுறவு வங்கிகளில் பணி புரிபவர்களுக்காகவும், கடன் வசூல் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்காகவும் இப்பயிற்சி அமைக்கப் பெற்றுள்ளது. பொதுவாக மைய, மாநில அரசுகளைச் சேர்ந்த கூட்டுறவு வங்கிகளின் நடுநிலை ஊழியர்கள்தான் இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இந்தியாவின் தென் வட்டாரப் பகுதி, கிழக்கு வட்டாரப் பகுதி ஆகியவற்றிலுள்ள கூட்டுறவுத் துறை அலுவலர்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகியோருக்கும் இந்தப் பட்டப் பயிற்சியை வழங்குவதில் இந்தக் கல்லூரிக்குப் பெரும் பங்கு உண்டு. பயிற்சியாளர் போதுமான அனுபவம் பெறுவதால் கூட்டுறவுச் சட்டம், கூட்டுறவு நடைமுறை, கூட்டுறவு வங்கித் தொழில், நடைமுறை வங்கித் தொழில் மற்றும் கூட்டுறவுக் கணக்கு ஆகியவை பற்றிய புதிய புதிய முறைகளும் மிக அவசியமான தகவல்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**கூட்டுறவுத் தணிக்கைத் துறை 'டிப்ளமா':**

கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த அலுவலர் மற்றும் கூட்டுறவு நிறுவன அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் இதுவும் ஒன்று. இது 12 வார காலப் பயிற்சியாகும். பெரும்பாலும் தென் மாநிலங்களின் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த தணிக்கைப் பிரிவு அலுவலர்களுக்கும், சில நேரங்களில் கூட்டுறவு நிறுவனங்களின் உட் தணிக்கைப் பிரிவைச் சார்ந்த அலுவலர்களுக்கும், இப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியாளர்களுக்குத் தணிக்கை முறையில் உள்ள நுட்பங்களைக் கற்றுத்தருவதுடன், நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், நிதி நிலை ஆய்வுகளை நடத்துதற்கும், நிதி நிர்வாகத் திறமை பெறுவதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. நிதிக் கணக்குகள், கணக்கீடுகள், தணிக்கை முறையின் கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவையும் கற்பிக்கப் படுகின்றன.

மேற்குறிப்பிட்ட மூன்று பயிற்சிகளிலும் கூட்டுறவுத் துறையில் வளர்ந்து வரும் நாடுகளிலிருந்தும் வளர்ச்சியில்லா நாடுகளிலிருந்தும் UNDP (United Nation Development Programme), ILO (International Labour Organisation), SCAAP (Special Commonwealth African Assistance Plane), TCS (Technical Co-operation Scheme of Columbu Plane) முதலிய திட்டங்களின் மூலமாக மத்திய அரசினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தக் கல்லூரிக்கு அனுப்பப் படுகிறார்கள்.

**தொழில்முறை 'டிப்ளமா':**

நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் கூட்டுறவுத் துறையின் கீழே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்லாமல் மற்றும் பல துறைகளின் கீழே உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தொழில் மற்றும் வணிகத் துறை, காதி கிராமத் தொழில் வாரியம், கைத்தறித் துறை ஆகியவற்றில் ஏற்கெனவே பணிபுரியும் கூட்டுறவுத் தொடர்பான அலுவலர்களும், புதிதாகப் பணியைமேற்கொள்பவர்களும், இந்தப் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இது 18 வார காலப் பயிற்சியாகும். பல்வேறு விதமான தொழில் கூட்டுறவுத் துறையில் பணிபுரிவதற்கும், நிர்வாகம் செய்வதற்

தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்ட மொத்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தனி அலுவலர்களுக்கு நடத்தப் பெற்ற நான்கு நாள் சிறப்புப் பயிற்சியின் நிறைவு விழாவில் ஐ. எல். ஓ. நிபுணர் திரு. ஜேகப்தாசன் சிறப்புரை ஆற்றினார்.




கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!
ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.
மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.
கைத்தறியே வண்ணத்துப்பூச்சி
கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர் அதன் தனிச்சிறப்பை அறிவர்
பண்டைச் சிறப்பும் நவீன நயமும் இணைந்து திகழ்வது வண்ணத்துப்பூச்சி



உயர் டிப்ளமா பயிற்சி துவக்க விழாவில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி முதல்வர் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களையும் கூட்டுறவுத் துறையின் கூட்டுப் பதிவாளர் அவர்களையும் வரவேற்று உரையாற்றுகிறார்.

கும் போதுமான திறமையைப் பயிற்சியாளர்கள் பெறுகிறார்கள். தொழில் துறை வளர்ச்சி, மற்றும் கூட்டுறவுத் தொழில் துறை, கூட்டுறவுச் சட்டம் மற்றும் இதர சட்டங்கள் கூட்டுறவுக் கணக்கு முறை மற்றும் தணிக்கை முறை—கூட்டுறவுத் தொழில் நிர்வாகம் ஆகிய பாடங்கள் இந்தப் பயிற்சியில் கற்றுத் தரப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நான்கு 'டிப்ளமா' பயிற்சிகளிலும் பொதுவான நிலை ஒன்று உள்ளது. பயிற்சி வகுப்பில், படிப்பு முறை ( Theoretical ), செயல் முறை ( Practical ) என இரு முறைகள் உள்ளன. நிறுவனத்தைப் பற்றிய போதிய அறிவைப் பெற்றவுடன், பயிற்சியாளர்கள், முதல் நிலைத் தகவலை அறிந்து கொள்வதற்காகக் களத்துக்கு அனுப்பப்படுகின்றனர். செயல் முறைப் பயிற்சிக்குச் செல்லும்போதே அலுவல் பயிற்சியும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உயர்நிலை டிப்ளமாப் பயிற்சியிலும் தொழில் துறை 'டிப்ளமா' பயிற்சியிலும் ஈடுபடும் பயிற்சியாளர்கள் அயல் மாநிலங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் பயில்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

செயல்முறைப் பயிற்சியின்போது, பயிற்சியாளர்களுக்கு வேலை ஏடு ( Job chart ) ஒன்று அளிக்கப்படுகிறது. செயல்முறைப் பயிற்சியின் இறுதியில், பயிற்சியாளர்கள், சம்பந்தப்பட்ட பயிற்சியைக் குறித்துக் கருத்துரைகள், விமரிசனங்கள் ஆகியவற்றைத் தொகுத்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். படிப்பு முறைப் பயிற்சிக் காலத்தில், சில குறிப்பிட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவற்றின் கூட்டுறவு வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்துவதற்காகப் பயிற்சியாளர்கள் அவ்வப்போது அங்குச் சென்று வர வேண்டும். அவர்கள் வாரம் ஒரு முறை அல்லது இரு வாரங்களுக்கு ஒரு முறை சென்று வருகின்றனர். சென்னையைச் சுற்றிலும் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுப்பினர் அதிகரித்தல், கடன் வசூல் செய்தல், கணக்குகளைச் சரியாக வைத்திருத்தல், கூட்டுறவுச் சங்கங்களின் டெபாசிட் தொகைகளை அதிகரித்தல் ஆகிய இனங்களில், பயிற்சியாளர்கள் உதவி செய்து வருகின்றனர்.

புது டில்லியில் உள்ள தேசிய கூட்டுறவுப் பயிற்சிக் குழு, தமிழ்நாடு கூட்டுறவுத் துறை, தொழில் வணிகத் துறை, கூட்டுறவு வங்கிகள் ஆகிய பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பல்வகை அலுவலர்கள் இந்தக் கல்லூரியில் விரிவுரையாளர்களாகப் பணி புரிகிறார்கள். வெளியூர்களிலிருந்தும் சில பிரமுகர்கள் அவ்வப்போது வரவழைக்கப்படுகிறார்கள். அரசுத் துறைகள், பல்வேறு கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள், வங்கிகள், ஆராய்ச்சி நிலையங்கள் ஆகியவற்றைச் சார்ந்த அனுபவமும் திறமையும் பெற்ற பெருமக்கள், சில நேரங்களில் வகுப்பறைச் சொற்பொழிவுக்கு வரவழைக்கப்படுகிறார்கள்.

குழு விவாதம், கூட்டுக் கல்வி, ஆய்வு விவாதம், சொற்போர், கருத்தரங்குகள் ஆகிய பல்வேறு விதமான பயிற்சி நுணுக்கங்களைப் பயிற்சியாளர்கள் அமைக்க வேண்டும். பருவ காலத் தேர்வும் ( Terminal Examination ) இறுதித் தேர்வும் நடத்தப்படுகின்றன. எழுத்துத் தேர்வில் பெறுகின்ற மார்க்குகள், செயல்முறைத் தேர்வுகளில் பெறுகின்ற மார்க்குகள், செயல்முறைத் தேர்வுகளில் அவர்கள்

காட்டுகின்ற திறமை, தாங்களாகவே பாடம் தயாரித்துக் கொள்ளும் ஆற்றல் ஆகியவற்றைக் கொண்டு மதிப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி பெறுபவர்களுக்கு, கட்டணம் இன்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தங்குவதற்கு விடுதியும் (Hostel) இலவசமாகத் தரப்படுகிறது. 36 வார காலப் பயிற்சியில், பயிற்சியாளர்கள் 8 வாரம் செயல் முறைப் பயிற்சிக்கு வெளியூர்களுக்குச் செல்ல நேரிடுகிறது. இந்த 8 வார செயல் முறைப் பயிற்சியில் 3 வாரம் கூட்டுறவுத் துறையில் முன்னேற்றம் கண்டுள்ள மராட்டியம், குஜராத், மற்றும் பஞ்சாப் போன்ற மாநிலங்களுக்குச் செயல் முறைப் பயிற்சி பெறுவதற்கு அனுப்பப்படுகிறார்கள். மற்ற 5 வாரங்கள் தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பணியைப் பற்றி நேரில் கண்டறிய அனுப்பப்படுகிறார்கள். அதற்கு ஆகும் செலவையும் பயிற்சிக் கல்லூரியே தருகிறது. ஏறக்குறைய ஒரு பயிற்சியாளருக்கு மொத்தம் ரூ. 4 ஆயிரத்திலிருந்து ரூ. 6 ஆயிரம் வரை கல்லூரியில் செலவிடப்படுகிறது. மற்ற மாநிலங்களில் இப் பயிற்சி கட்டாயம் இல்லை. தமிழ்நாட்டில் இது கட்டாயமாக வைக்கப்பட்டிருக்கிறது. பயிற்சியாளர்கள், பயிற்சி பெற்ற பின்பு, கூட்டுறவுத் துறையில் பணியாற்றாமல் வேறு துறைக்குச் சென்று விட்டால், அவருக்குச் செலவு செய்யப்பட்ட ரூ. 6 ஆயிரத்தை, இக்கல்லூரிக்கு அவர் திருப்பித் தர வேண்டும்.

பல்வேறு குறுகிய காலப் பயிற்சியும் இக் கல்லூரியில் நடத்தப்பட்டு வருகிறது.

கருத்துரை சொல்லும் நிறுவனமாகவும் இந்தக் கல்லூரி பயன்பட்டு வருகிறது. சில கூட்டுறவு நிறுவனங்களின் பண வரவு செலவைக் கட்டுப்படுத்துவதில் பிரச்சினை இருக்கும். அந்தப் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பது இக்கல்லூரியில் சொல்லித் தரப்படுகிறது. இது போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கப் பயிற்சி வேண்டும் எனக் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் கோரும்போது இத்தகைய சிறப்புப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

கால்நடை வளர்ப்புத் துறையைச் சார்ந்த கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் கால்நடை உதவி அறுவை மருத்துவர்கள் கூட்டுறவு என்றால் என்னவென்றே தெரிந்திருக்க முடியாது. அது குறித்து அவர்களுக்குக் கற்றுத் தருவதற்காக இரண்டு வாரப் பயிற்சி நடத்தப்படுகிறது. சில நேரங்களில் அவர்களது இடத்துக்குக் கல்லூரி ஆசிரியர்கள் சென்று, அவர்களது பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ற வழி வகைகளைச் சொல்லி வருகின்றனர்.

இவ்வாண்டு, பல்கலைக் கழகங்களில் கூட்டுறவைப் பாடமாக நடத்துகின்ற ஆசிரியர்களுக்கும் இக்கல்லூரியில் ஒரு வார குறுகிய காலப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகளின் வளர்ச்சிக்காகவும் அவர்களுக்கு ஒரு வாரப் பயிற்சி ஒன்றும் நடத்தப்படுகிறது.

இக்கல்லூரி வியாபார சம்பந்தமான சில யோசனைகளையும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தெரிவித்து வருகிறது. சான்றாக, சென்னை செரியன் நகரில் உள்ள குடிசைப் பகுதியில் சில பெண் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து, 'பத்திக் பிரிண்டிங்' செய்து மேல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யத் தக்க ஆடைகளைத் தயாரித்து வருகின்றனர். அவர்களுக்குத் தக்க வகையில் கருத்துரை வழங்கி, அவர்களது தயாரிப்புகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்கு நல்ல இலாபம் கிடைப்பதற்கு இந்தப் பயிற்சிக் கல்லூரி பணிபுரிந்து வருகிறது.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பை உணர்த்துவதற்காக (Image Building of consumer Co-operation ) ஒரு திட்டத்தை உருவாக்கி நடத்தி வருகிறது. குடிசைப் பகுதிக்குச் சென்று அங்குள்ள தாய்மார்களிடம் கூட்டுறவு நுகர்வோர் சங்கத்தின் பொருள்களைப் பயன்படுத்தச் சொல்வதுதான் இந்தத் திட்டம். இதற்குக் கல்லூரியில் பயிலும் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவியர் பயன்படுத்தப்படுகிறார்கள். சென்னை நகரில், எத்திராஜ் கல்லூரி, ராணி மேரிக் கல்லூரி, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, பெண்கள் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம் கிறித்துவக் கல்லூரி, ஸ்டெல்லா மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சார்ந்த மாணவியர் இப்பணியில் சென்ற ஆண்டு ஈடுபடுத்தப்பட்டனர். அப்பணியைச் செய்ய அவர்களுக்குத் தேவையான கருத்துக்களை வழங்கத் தனிப் பயிற்சிகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தியாவின் வேறு மாநிலங்களிலும் இத் திட்டத்திற்கு வரவேற்பு இருக்கிறது. டெல்லி, ஐதராபாத் ஆகிய நகரங்கள் இது குறித்து இந்தக் கல்லூரியை விசாரித்து எழுதியுள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் ஆண்டுக்கு இரண்டு கருத்தரங்குகளையும் இந்தக் கல்லூரி உருவாக்கி நடத்தி வருகிறது.

6,000 புத்தகங்கள் கொண்ட நூலகம் ஒன்றும் இக்கல்லூரியில் உள்ளது. கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான பல்வேறு வகை இதழ்கள் (Magazines) வரவழைக்கப்படுகின்றன.

தற்சமயம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சேத்துப்பட்டுப் பாலத்தின் கீழ்ப்பகுதியில் அமைந்திருக்கும் இந்தக் கல்லூரி, விரைவில் அண்ணா நகரில் புதிதாக ஒரு கட்டடத்தை அமைத்துக் கொள்ள இருக்கிறது. ஏறக்குறைய 4 ஏக்கர் (76 மனை) பரப்பளவுள்ள இடம், இதற்கென 6.5 இலட்ச ரூபாய் விலையில் வாங்கப்பட்டுள்ளது. இதில் வகுப்பறைகள், அலுவலகம், மாணவர் விடுதி, நூலகம், ஆசிரியர் வசிப்பிடம் ஆகிய அனைத்தும் அமைக்கப்பட உள்ளன. இவை உருவாவதற்கு தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் 6.5 இலட்சம் ரூபாயும், இந்திய அரசு 10 இலட்சம் ரூபாயும், தமிழ்நாடு அரசு 10 இலட்சம் ரூபாயும், தமிழ்நாட்டிலுள்ள ஏனைய கூட்டுறவு நிறுவனங்கள் சுமார் 10 இலட்சம் ரூபாயும் வழங்கியுள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவராகப் பல காலம் பணிபுரிந்த காலஞ் சென்ற டாக்டர் நடேசன் அவர்களின் பெயரால் 'டாக்டர் நடேசன் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி' என இது வழங்கப்பட இருக்கிறது.

இக்கல்லூரி தமிழ்நாட்டுக் கூட்டுறவுத் துறைக்கு நாடி நரம்பாக விளங்குகிறது என்பது தமிழ்நாட்டுக்கே பெருமை தரும் செய்தியாகும்!

—எஸ். சண்முகசுந்தரம், பி.லிட்.



# குழந்தைகளுக்குத் தேவை சத்தான உணவு
# பயிர்களுக்குத் தேவை விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517



# அரசினர் அருங்காட்சியகம் ஆற்றிடும் பணிகள்

திரு என். ஹரிநாராயணு
உதவி இயக்குநர், அரசு அருங்காட்சியகம், சென்னை.

"கல்லூரியில் உள்ள அருங்காட்சியகம் தினமும் (ஞாயிறு நீங்கலாக) காலையில் 6 மணி முதல் 7 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரையும் வருகையாளர்களுக்கெல்லாம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்.''

1851 ஏப்ரல் 29-ல் வெளியிடப்பட்ட சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையின் அரசிதழில் அமைந்திருந்த அறிக்கையின் தமிழாக்கம் இது. இந்நாட்டின் மிகப் பெரிய மாநில அரசு அருங்காட்சியகமாகவும், கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்திற்கு அடுத்த பழமை மிக்க அருங்காட்சியகமாகவும் விளங்கும் சென்னை அரசு அருங்காட்சியகத்தை ஆரம்பித்ததைத்தான் மேலே குறிப்பிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. மிகப் பெரும் அருங்காட்சியகங்களாகிய இந்திய அருங்காட்சியகம், பிரிட்டிஷ் அருங்காட்சியகங்களைப் போன்று உயிரியல் பொருள்களைக் கொண்டு ஒருங்கு வைத்து ஒப்பிடப்படும் சிறப்பு இதற்கு உண்டு. இவ்வருங்காட்சியகம் அறிஞர் குழுவாய் செயலாற்றிய சென்னை இலக்கியக் கழகத்தின (Madras Literary Society) ரால் துவக்கப்பட்டது. புவியியல் பொருள்களின் சேகரிப்புகளுடன் துவங்கியது.

தற்போது கல்வி இயக்குநர்கள் இருக்கும் இடத்தில் இருந்த பழைய கல்லூரியின் முதல் மாடியில், சென்னை அருங்காட்சியகம், முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1854ல் பொது அறைகள் என்றும் கூடங்கள் என்றும் அழைக்கப்பட்ட ''பாந்தியன்'' கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. பாந்தியன், கிளைவ், சர் ஆர்தர் வெல்லஸ்லி, லார்ட் காரன் வாலிஸ் போன்ற கிழக்கிந்தியப் பெருந்தகைக் காரர்களின் ஆடல் பாடல், கேளிக்கை விருந்துகளுக்கு உரிய இடமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்நாளில் பெரும் மனிதர்களாய் விளங்கிய சீமான்களின்—சீமாட்டியரின் காலடியோசைகளை எதிரொலித்த பாந்தியன், பொது மக்களில் பூத்திருக்கும் ஆர்வம் மிக்க அறிஞர்களின் காலடியோசைகளை இன்று எதிரொலிக்கிறது. பாந்தியனின் எஞ்சியிருக்கும் பகுதிகள் தற்போது அருங்காட்சியகத்தின் மற்றக் கட்டடங்களால் சூழப்பட்டிருக்கின்றன.

தலைமை அறுவை மருத்துவர் எட்வர்ட் கிரீன் பால்பர், அருங்காட்சியகம் அமைத்திடும் பொறுப்பை ஏற்ருர். அப்பணியில் குன்ருத ஊக்கத்தோடும், பணி மனப்பாங்கோடும் ஈடுபட்டார். இயன்ற வரைக்கும் மிகப் பெரிதாக அருங்காட்சியகத்தை அமைத்திட வேண்டும் என்கின்ற ஆர்வத்தில் சேமிப்பின் தன்மைகளுக்கு எல்லைகள் வகுக்காமல் அருங்காட்சியகப் பொருட்களைச் சேகரித்தார்.

1859ல் பால்பர் அருங்காட்சியகப் பணியை விட்டுச் செல்கையில் புதிய அருங்காட்சியகத்தை உறுதியான தளத்திலே அமைத்திருக்கிருேம் என்ற மன நிறைவுடனே சென்ருர். சென்னை இலக்கியக்கழகத்தில் புவி அமைப்பியல் பொருட்கள் (சுமார் 1,100) அருங்காட்சியகத்தின் புவியியல்



சென்னை அருங்காட்சியகத்தின் முதல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய அறுவை மருத்துவர் எட்வர்ட் கிரீன் பால்பர்.

பொருட்களாக இருந்தன. அருங்காட்சியகத்தின் முதல் தலைவராக இருந்த பால்பர் உழைத்த கடும் உழைப்பு,விரைவில் பெரும் பயனை அளித்தது. அருங்காட்சியகம் திறக்கப்பட்டவுடன் மாதத்திற்கு 1,000 எனப் பொருட்கள் அருங்காட்சியகத்திற்காகப் பெறப்பட்டன. அவரும் அவரைத் தொடர்ந்து பதவி வகித்த மூவரும் பொருட்களைச் சேமிக்கும் கொள்கையை மிக விரிவாகச் செயல்படுத்துவதில் ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். பால்பர், எவ்வித நிபந்தனையும் இன்றி எல்லாப் பொருட்களையும் பெறுவது குறித்துத் தெளிந்த உறுதியான கொள்கையைக் கொண்டிருந்தார். ''இவ்வருங்காட்சியகத்தின் செயல் எல்லையை மிகப் பெரிதாக அமைப்பதற்குரிய மற்றொரு காரணம், இந்த மிகப் பெரிய நாட்டை, எடுத்துக் காட்டி உணர்த்த வேண்டுமெனின் அதற்கேற்றவாறு பெரும் அளவில் அமைப்பதே முறை என்ற வழக்கே. குறுகிய வரையறைகள் உடைய அருங்காட்சியகம் இம்மாநிலங்களை எடுத்துக் கூறுவதற்குப் பயன்படாததோடு, அரசு ஆதரிப்பதற்கும் தகுதியற்றதாகிவிடும்'' என்பது அவரது சிந்தையைக் காட்டும் வரியோட்டங்களாகும். பால்பர் அமைத்த பெரு நோக்கு, டாக்டர் எட்கர் தர்ஸ்டன் வரும் வரை பின்பற்றப்பட்டு வந்தது. 1885 முதல் 1908 வரை அருங்காட்சியகக் கண்காணிப்பாளராக இருந்த 'நான் எனது முழுக் கவனத்தையும் தென்னிந்தியாவின் உயிரியல், கலைகள், பண்பாட்டுக் கோலங்கள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றிலேயே செலுத்துவது எனத் தீர்மானித்துள்ளேன்'' என்று கூறி அருங்காட்சியகத்தின் சேகரிப்பு எல்லையைக் குறைத்து விட்டார்.

தர்ஸ்டனின் சேகரிப்பு எல்லையைக் குறைத்த செயல், ஆய்வு முறையை ஆழமாக்கியது. அவருடைய காலத்தில், எல்லாத் துறைகளிலும் வெளியிடப்பட்ட சிறந்த தரம் மிக்க பல வெளியீடுகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன. அருங்காட்சியகத்தின் முதல் வெளியீடு 1853ல் வெளி வந்தது. அருங்காட்சியகப் பொருட்களைப் பற்றி பட்டியல்களும், அறிக்கைகளும் தாங்கிய இருபது வெளியீடுகள் பால்பர் பதவியை விட்டுச் செல்கையில் இருந்தன. அவரைத்தொடர்ந்து பதவியேற்றவர்களும் தங்கள் பங்காக நூல்களை வெளியிட்டனர்.

டாக்டர் பிடி 1872 முதல் 1884 வரை கண்காணிப்பாளராக இருந்தார். நல்ல புகழ் பெற்ற தாவரவியல் அறிஞராகிய அவரது ஆய்வெல்லையை விரிவுபடுத்திக் கொண்டு அருங்காட்சியகத்தில் உள்ள நாணயங்களைப் பற்றி இரு நூல்களை எழுதினர். டாக்டர் தர்ஸ்டன், இன்று வரை சிறந்த ஆதார நூலாக விளங்கும் ''தென்னிந்திய சாதிகளும் பழங்குடிகளும்'' என்னும் நூலை 1893 முதல் அருங்காட்சியக [illegible] களாக ஏழு பாகங்களில் வெளியிட்டார். நாணயவியல் முதல் தேசியக் கைவினைகள், தாதுப் பொருட்கள், மீன் வகைகள் வரை பல்வேறு துறைகளில் பல நூல்களை அவர் எழுதினர். அருங்காட்சியக வெளியீடும் பெரும் வளர்ச்சியில் திகழ்ந்த காலத்தில் தமது 1938—40 ஆண்டு நிர்வாக அறிக்கையில் ''இயற்கை'' என்னும் அறிவியல் இதழில் தொல் பொருளியல் கூடங்களுக்கு விளக்கங்கள்' என்னும் நூலைப் பற்றி இந்த விளக்கங்களால் கல்வி முறையில் வேகம் மிக்க முன்னோர்க்குக் கொள்கையை வைத்துள்ளதைப் போன்று இந்தியா முழுமையிலும் உள்ள அருங்காட்சியகங்கள், வேறு இதை விட வலிவான விளக்கத்தைத் தர இயலாது'' என்று தர்ஸ்டனால் கூறப்பட்டுள்ளதை டாக்டர் எப். ஜி. கிரேவ்லி எடுத்துக் காட்டியுள்ளார். அருங்காட்சியகத்தின் பல வெளியீடுகள் பல முறை மறுப்திப்புகள் போட வேண்டிய அளவிற்கு, அவற்றிற்குரிய துறைகளின் தரம் மிக்க நூல்களாக இன்றும் திகழ்கின்றன.

அருங்காட்சியகத்தின் இடப் பெருக்கம் மெதுவாக, ஆனால் நன்கு தெரியும் வகையில் வளர்ந்திருக்கிறது. 1864லேயே பாந்தியன் கட்டடத்திற்குப் பல இணைப்புக் கட்டடங்கள் இருந்தன. தற்போது மானிடவியல் கூடங்கள் உள்ள பகுதி, நாடக அரங்கு, கன்னிமாரா நூலகத்



தென்னிந்தியாவில் கற்சிலைகள் வளர்ந்த வகையை எடுத்துக் காட்டும் பகுதி.

தின் ஒப்பு நோக்குக் கூடம் உள்ள ஆகியவற்றைக் கட்டுவதற்கு 1890ல் அனுமதி அளிக்கப்பட்டு 1896ல் அவை கட்டி முடிக்கப்பட்டன. தொல் பொருள் வேதியல் ஆய்வகத்திற்குத் தனியாக ஒரு கட்டடம் 1934ல் கட்டப்பட்டது. பழம் பொருட்களை அறிவியல் முறையில் காப்பதற்கும், ஆய்வதற்கும் இந்நாட்டில் கட்டப்பட்ட முதல் அருங்காட்சியக ஆய்வகம் என்ற பெருமை இதற்கு உண்டு. நுழைவாயிற் கூடத்தையும், காப்பாட்சியர் பணியகங்களையும் கொண்ட புதிய தொல் பொருளியல் இணைப்புக் கூடம் 1939ஆம் ஆண்டு டிசம்பர் 4ஆம் நாள் திறக்கப்பட்டது. டாக்டர் எ. ஐயப்பன், க்ண்காணிப்பாளராக இருந்தபோது 1951ல் நிகழ்ந்த அருங்காட்சியக நூற்றுண்டு விழாவின்போது, கவர்ச்சி மிக்க கட்டடமாகிய தேசியக் கலைக் கூடம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் முன்பு விக்டோரியா தொழில் நுட்ப நிறுவனம் இருந்தது. விலங்கியல் கூடங்கள் விரிவுபடுத்தப்பட்டன. வேதியல் காப்பு ஆய்வகத்திற்கு இருமாடிக் கட்டடம் ஒன்று சேர்க்கப்பட்டது. கடந்த பதினைந்து ஆண்டுகளில் சிறுவர் கூடம், அஞ்சல் தலைக் கூடம், நாணயவியல் கூடம் எனப் புதிய கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விலங்கியல் காப்பாட்சியர் பணிக்கூடம், இறுதியாகச் சேர்க்கப்பட்டுள்ள புதுக் கட்டடமாகத் திகழ்கிறது.

## அருங்காட்சியகச் சேகரிப்பு

சேகரிப்புகளின் அளவும் தன்மையும் வளம் பெற்றுக் கொண்டே வருகிறது. 1873—1874ல் ரூபாய் 1,500க்கு வாங்கிய லெப்டினென்ட் கர்னல் பீடாம் ஹெர்பேரியம்' அருங்காட்சியக தாவரவியல் சேமிப்பை வளப்படுத்தியது. அமராவதி சலவைக் கல் சிற்பங்கள் டாக்டர் பிடியின் காலத்தில் பெறப்பட்டன. அவை ஸ்தூபாவின் வெளிச் சுற்று வேலியில் அமைக்கப்பட்டிருந்தவை. அந்தச் சிற்பங்களை, உண்மையான ஸ்தூப அமைப்பை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அருங்காட்சியகத்தில் அமைத்திருக்கின்றனர். விலங்கியல்பகுதியின் முதல் கூடத்தில் வருகையாளர்களை பிரமிக்க வைக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் திமிங்கிலத்தின் எலும்புக் கூடு, 1864 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மங்களூர் கடற்கரையில் ஒதுங்கிய இறந்த திமிங்கிலத்தினுடையது ஆகும்.

அருங்காட்சியகத்தின் முந்து வரலாற்றுக் காலப் பொருட்கள் (ப்ரி ஹிஸ்டாரிக்) மிக முக்கியமானவை. நீலகிரியின் பழைய புதை குழிகளிலிருந்து பிரீக்ஸ் அவர்களால் சேகரிக்கப்பட்ட பானைகள் முதலியனவற்றைக் கொண்டு 1878—ஆம் ஆண்டு முதல், முந்து வரலாற்றுக் காலப் பொருட்களின் சேகரிப்பு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 1904ஆம் ஆண்டு முதல், இந்திய முந்து வரலாற்று ஆய்வின் முன்னோடியாக விளங்கும் இராபர்ட் புருஸ்டிட்டிடமிருந்து, அவரது விலை மதிப்பு மிக்க முந்து வரலாற்றுப் பொருட்கள் வாங்கப்பட்டன. அதே ஆண்டில் தேக்கு, ரோஸ் உட் ஆகிய மரங்களின் இரு குறுக்கு வெட்டில் அமைந்த அடி மரத் துண்டுகள் வாங்கப்பட்டன. தேக்கு 500 ஆண்டுகள் பழமையும் ரோஸ் உட் இருநூறு ஆண்டுப் பழமையும் உடையவை. தேக்கு மரத்தின் ஆண்டு வளையங்களைக் கணக்கிட்டு, குறிப்பிட்ட ஆண்டு வளையங்களுடன் வரலாற்று நிகழ்ச்சிகளும் குறிக்கப்பட்டுள்ளன. இது காண்போரின் ஆர்வத்தைப் பெருக்குகிறது.

அருங்காட்சியகத்தில் உள்ள செப்புச் சிலை பகுதி.



தொடர்ந்து மிக அழகிய திருமேனிகள் புதையல்களாகக் கிடைத்த வண்ணம் இருக்கின்றன. காசுகளும், புதையல்களாகக் கிடைத்துள்ளன. உதாரணமாக ரோமானிய, தங்க, வெள்ளி நாணயங்கள், 1946ல் தவளேஸ்வரத்தில் கண்டெடுக்கப்பட்ட ராஜராஜ சோழன், முதலாம் குலோத்துங்கச் சோழன் ஆகியோர் கால தங்க நாணயங்கள், கி.பி. இரண்டு, மூன்று நூற்றுண்டுகளைச் சேர்ந்த ஆண்டுப்பட்டியில் கண்டெடுத்த ஈய நாணயங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கன. புதிய இணைப்பு தொல்பொருளியல் கூடங்கள் 1937ஆம் ஆண்டு திறக்கப்பட்டன. அப்போது பல அழகிய வட இந்தியச் சிற்பங்கள் பெறப்பட்டு, சிற்பக் கூடத்தில் அமைக்கப்பட்டன. 1951ல் தேசியக் கலைக்கூடம் அமைக்கப்பட்டபின் தற்காலத்திய இந்திய ஓவியங்களும், சிற்பங்களும், அவற்றிற்குரிய இடத்தில், அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டு உள்ளன.



பறவைகளுக்கென்றும் ஒரு தனிப்பகுதி உள்ளது.

## அருங்காட்சியகத்தில் ஒரு பயணம்

தனது சிறியதோற்றக் காலத்திலிருந்து பல்வேறு பொருள்களைக் கொண்ட பல கட்டிடங்களை உடையதாக பெருமளவிற்கு அருங்காட்சியகம் வளர்ந்து காட்சியளித்தது. அருங்காட்சியகத்தை ஒரு சுற்றுப் பார்வையிட்டு வருவோமேயானுல் அதன் சேகரிப்பின் செறிவையும், நுட்பத்தையும் அங்கேயுள்ள பொருள்கள் உறுதி செய்வதை அறியலாம். அருங்காட்சியகநுழைவாயில் கவர்ச்சி மிக்க கட்டட அமைப்போடு விளங்குகிறது. அதில் நுழைந்து சென்ருல் தென்னிந்திய சிற்பக் கலையின் வளர்ச்சியை கால முறையாக, விளக்குகின்ற வகையில் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதை அடுத்து கோயில் கலை, கல்வெட்டியல், பௌத்த, சமணக் கலைகள் ஆகியவை கூடங்களில் வைக்கப்பட்டுள்ளன. அமராவதிச் சிற்பங்கள் அவைகளில் சிறந்து விளங்குகின்றன.

மனித இன வேறுபாடுகளையும், பண்பாடுகளையும் விளக்கும் பகுதி.




விலங்கியல் கூடங்கள் பெரும் திமிங்கிலத்தின் எலும்புக் கூடு, யானை, குதிரை ஆகியவற்றின் எலும்புக் கூடுகள் ஆகியவற்றேடு துவங்குகின்றன. பறவைகள் கூடம்,பறவைகளை ஆய்வோருக்கு ஒரு சொர்க்கமாகும். முதல் மாடியில் பொருளாதார, தாவரவியல், வகைப்படுத்திய தாவரவியல் என இரு பிரிவுகளைக் கொண்ட தாவர இயல் பகுதி உள்ளது. கீழே திமிங்கில எலும்புக்கூடு இருக்கும் கூடத்தின் வடக்குப் பகுதியில், புதிய முறையில் அமைக்கப்பட்ட புவி அமைப்பியல் கூடமும் ஓவியக் கூடமும் உள்ளன. புவிஅமைப்பியல் கூடம் கல், மண், ஆகியவற்றின் கதைகளையும் நாகரிகத்தில் அவற்றிற்கு உள்ள பங்கினையும் எடுத்துக் கூறுகின்றன.

மூன்று மாடிகளைக் கொண்ட படிமக் கூடம் 1963ல் திறக்கப்பட்டது. திருவெண்காட்டிலிருந்து பெற்ற அழகிய மாதொருபாகர் சிலை, நாம் அடியெடுத்து வைத்ததும் அன்பாக அழைப்பதைப் பார்க்கலாம். அங்குள்ள திருமேனிகள் தென்னிந்தியக் கலைகளின் முத்தாய்ப்பாகச் சுடர்

விட்டுப் பிரகாசிக்கின்றன. கலை இரசிகர்களை ஆனந்தப் பெரு வெள்ளத்தில் ஆழ்த்துகின்றன. சைவம், வைணவம், சாக்கியம், சமணம் ஆகிய சமயங்களின் திருமேனிகள் இங்குக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

படிமக் கூடத்திற்கு முன்னதாக இருக்கும் முகப்புப் கூடத்தில் முந்து வரலாற்றுப் பொருள்கள் வைக்கப்படடுள்ளன. ஆதிச்சநல்லூரின் இரும்புப் பொருள்கள் நம்மை அவற்றின் அழகிய வடிவத்தாலும் வேலைத் திறத்தாலும் வியப்பிலாழ்த்துகின்றன. பண்பாட்டுக் கூடத்தில், காட்சிப் பெட்டிகளில் பழங்குடிகளின் வாழ்க்கை சித்திரிக்கப்பட்டுள்ளது. தேர்ந்தெடுத்த பழங்குடி மக்களின் பண்பாட்டுப் பொருள்களைக் கொண்டு, சூழ்நிலைக்கும், வாழ்க்கைக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்படும் வினைகளைக் காட்டும் கருவிகள், அணிமணிகள், ஆயுதங்கள் ஆகியவற்றையும் காட்சியில் காணலாம். முதல் மாடியில் மரச் சிற்பக் கூடம், உலோகக் கலைக் கூடம், இன்னிசைக் கருவிக் கூடம், எழுது கருவிகள், நெருப்புக் கடைதல் போன்றவற்றைக் காட்டும் பல கூடங்கள் உள்ளன. கீழ்ப் பகுதியில் உள்ள ஆயுதக் கூடத்தில் உள்ள ஆயுதங்களில் சில, இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர் காலத்தில் போர்களில் பயன்படுத்தப்பட்ட சிறப்பு உடையவை.

தேசியக் கலைக் கூடத்தில், இந்தியக் கலையின் சிறப்பு பண்டுமுதல் இன்று வரை கால முறையிலும், நுண்கலை முதல் அழகுக் கலை வரை, திறத்தாலும் வேறுபட்ட பல வகைச் சிறப்பை அருங்காட்சியகத்தில் உள்ள பொருள்கள் மூலம் உணர்த்துகின்ற தன்மையில் அமைக்கப்பட்டுள்ளன. புகழ் பெற்ற திருவாலங்காடு நடராசர், இராமர், சீதை, இலக்குவன், அனுமான் ஆகிய திருமேனிகள், கூடத்தின் பக்கங்களில் சிறப்புற வைக்கப்பட்டுள்ளன. கூடத்தின் உயர்ந்த விதானம், இடத்தின் அமைதிச் சூழல், இதமான ஒளி ஆகியவை ஒரு சிறந்த உன்னதமான சூழலைத் தோற்றுவிக்கின்றன. இந்த இனிய சூழலிலே அமர்ந்து அழகிய திருமேனிகளைக் கண்டு களிமோனக் காட்சியிலே, கழி பேருவகைப் பொய்கையிலே மூழ்கி, முழுதுமாய்க் கரையலாம். தஞ்சை ஓவியங்களும், சின்னஞ் சிறு சிறப்போவியங்கள் இங்கே இருக்கின்றன. ஜைமினி ராய் போன்ற நவீன காலத்து ஓவியர்களின் கை வண்ணங்களும், வர்ண ஜாலங்களும், பல்வேறு பாணிகளைப் பிரதிபலிக்கின்ற வகையில் இங்கு வைக்கப்பட்டுள்ளன.



பொருளாதார அடிப்படையான உற்பத்திப் பொருள்களை விளக்கும் பகுதி.

### அருங்காட்சியகம் ஆற்றும் பணிகள்

சென்னை அருங்காட்சியகத்தின் கூடங்களை ஒரு சுற்றுப் பார்வையிட்டு வருவதென்பது உண்மையில் தென்னிந்தியாவின் கலை, பண்பாடு, உயிரியல் வாழ்க்கை ஆகியவற்றை உணர்ந்து கொள்வதென்பதாகும். ஒரு சிறிய விளக்க நூல், விற்பனைக் கூடத்தில் குறைந்த விலையில் விற்கப்படுகிறது. இது முக்கியமான காட்சிப் பொருள்களைப் பற்றித் தெரிவிக்கும். சென்னை அரசு அருங்காட்சியகத்தின் ஆங்கிலக் கையேடு, அருங்காட்சியகத்தின் வரலாற்றைப் பற்றியும், அதன் சேகரிப்புக்களைப் பற்றியும் விளக்கமாக உரைக்கும். வருகையாளர்கள் விளக்குநர்களிடமிருந்து விளக்கங்களைப் பெறலாம். மாதந்தோறும் படக் காட்சிகளும், பொது மக்கள் ஆர்வத்திற்கு உரிய உரைகளும் நடத்தப்பெறுகின்றன. சிறப்புக் கண்காட்சிகளும் அமைக்கப்படுகின்றன. இவையும் மற்றப் பணிகளும் பொது மக்களின் உணர்வையும், ஆர்வத்தையும் அருங்காட்சியகம் ஈர்க்கச் செயல்படுகின்றன.

ஆறு மாதங்களில் அருங்காட்சியகம் ஆற்றிய பணிகளையும் ஆறு மாதங்களுக்கு ஆற்றப்போகும் பணிகளையும் தெரிவிக்கும் அரையாண்டு அறிக்கையும் அருங்காட்சியகத்தால் வெளியிடப்படுகிறது. ஆர்வமுள்ள எவருக்கும் இது அனுப்பப்படும். இவ்விதமாக அரையாண்டு அறிக்கை வெளியிட்ட இந் நாட்டில் முதல் அருங்காட்சியகமாக, நமது அருங்காட்சியகம் விளங்குகிறது. அதே போன்று தனக்கென ஒரு தனி அச்சுக் கூடத்தைத் நிறுவி மற்ற அருங்காட்சியகங்களுக்கு முன்னோடியாகவும் திகழ்கிறது.

### அருங்காட்சியகத்தின் தொழில் நுட்பச் சேவைகள்

அருங்காட்சியகம் தனது பட்டறிவுச் சேவையைத் தேவைப்படும் நேரங்களில் வழங்கியிருக்கிறது. 1949ல் கல்வித் துறை இயக்ககத்தின் ஒத்துழைப்போடு கோடை விடுமுறையில் அருங்காட்சியகத் தொழில் நுட்பப் பயிற்சி தரப்பட்டது. பள்ளிகளில் சிறிய அருங்காட்சியகங்களை அமைக்க ஆசிரியர்களைத் தகுதி உள்ளவர்களாக ஆக்குவதற்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. விலங்கியல் துறை இம்மாநிலத்திலிருந்தும் பிற மாநிலங்களிலிருந்தும் வரும் கல்லூரி ஆய்வகப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டு கோடையிலும் போலி உயிரினம் ஆக்கும் கலையைக் கற்பித்துப் பயிற்சி அளிக்கிறது. வேதியல் பாதுகாப்புத் துறையால் அருங்காட்சியகப் பொருள்களைப் பாதுகாக்க நடத்தப்படும் ஒரு மாதப் பயிற்சி வகுப்பு 1975-ஆம் ஆண்டு



**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணங்கள் அடங்கிய பகுதி.**

துவக்கப்பட்டுள்ளது. தென் மாநில தொல் பொருளாய்வுத் துறைகளிலிருந்தும், அருங்காட்சியகங்களிலிருந்தும் பலர் இப்பயிற்சியைப் பெற்றுள்ளனர். பட்டறிவு ஆலோசனைகள் இவ்வருங்காட்சியக விற்பன்னர்களிடமிருந்து எப்போதும் பெறப்பட்டு வந்திருக்கிறது. சித்தன்னவாசல் ஓவியங்களை ஆய்ந்தறியவும், பாதுகாக்கவும் 1935ல் இவ்வருங்காட்சியகம்வேதியல் காப்பு, காப்பாட்சியரின் சேவை கோரிப் பெறப்பட்டுள்ளது. இது ஓவிய நுட்பங்களைப் பற்றி '-இயற்கை'' தொழில் நுட்ப ஆய்வுகள்'' போன்ற தரமும் தகுதிப் பெருமையும் மிக்க நூல்களுக்குக் கட்டுரைகள் வழங்க வைத்தது. சமீப ஆண்டுகளில் வேதியல் காப்புக் காப்பாட்சியரின் சேவையை அருங்காட்சியகத்திற்கு வெளியே பல இடங்களில் பயன்படுத்திக் கொண்டனர். திருவரங்கம் கோவில் வேணுகோபால் சன்னதியில் உள்ள ஓவியங்கள் சுத்தம் செய்யப்பட்டன. திருப்பதி தேவஸ்தானத்தின் அன்னமாச்சாரியாரின் செப்புப் பட்டயங்களுக்குக் காப்புப் பணிகள் செய்யப்பட்டன. மானிடவியல் காப்பாட்சியர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் மானிடவியல் டிப்ளமோ வகுப்புகளோடு தொடர்பு உடையவர்களாக இருந்து வருகின்றனர். அவர்கள் அந்தப் பயிற்சிக்குப் பல்கலைக் கழகத்தின் பகுதி நேரப் பேராசிரியர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

அருங்காட்சியகத்தின் தொல் பொருளியல் துறையினரால் சுற்றுலாத் துறையின் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு, தொடர்ச்சியாகத் தென்னிந்தியக் கலைகளைப் பற்றி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சென்னையின் புகழ் மிக்க நிறுவனங்கள் பலவற்றிற்கும் தோற்றக் காலாக இருந்த பெருமை அருங்காட்சியகத்திற்கு உண்டு. அருங்காட்சியகத்தை அமைத்ததும், சர்ஜன் பால்பர் (முதல் இயக்குநர்) விலங்குகள் தோட்டம் அமைக்கும்எண்ணத்தைக் கொண்டிருந்தார். அவரது எண்ணம் பெரும் வரவேற்பைப் பெற்றது. 1856ல் அவை மக்கள் பூங்காவிற்கு மாற்றப்பட்டுச் சென்னை நகராண்மைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பால்பருக்குப் பின் பதவியேற்ற கேப்டன் ஜேசி மிட்செல் பொது நூலகத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தார். '.நியாயமாக ஆண்டுதோறும் செலவழிக்கப்படும் சில நூறு ரூபாய்கள் நாளடைவில் அரசின் பெருமைக்குரிய, ஆலோசனைக்கு ஏற்ற ஒரு நூலகத்தை மக்களுக்குப் படைக்கும்'' என அவர் கூறியுள்ளார். இவ்விதமாக 1860ல் ஆரம்பிக்கப்பட்டு 1862 ஜூன் மாதத்தில் பொது மக்களை அனுமதித்த அருங்காட்சியக நூலகம் பின்னாளில் கன்னிமாரா பொது நூல்கமாக வளர்ந்தது. இது தற்போது தேசிய நூலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கீழை நாட்டுச் சுவடி நூலகமும் 1935ஆம் ஆண்டு வரை அருங்காட்சியகத்தோடமைந்திருந்தது. சென்னை மீன் காட்சியகம் தற்போதைய இடத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்பு, முதலில் அருங்காட்சியகத்தில்தான் அமைக்கப்பட்டது.

இந்நகரின் கலாச்சார வாழ்க்கையில் மறைமுகமாக இரு வழிகளில் அருங்காட்சியகம் பங்கேற்றுள்ளது. அருங்காட்சியக அரங்கு துவக்க நிலைக்கலைஞர்களை ஊக்குவிக்கவே அமைந்து நெடுங்காலமாகப் பணியாற்றி இருக்கிறது. அருங்காட்சியகத்தின் மறுபகுதியில் அருங்காட்சியக நூற்றுண்டுக் கூடம், கலைஞர்கள் தங்கள் படைப்புகளைக் கண்காட்சி அமைத்துக்காட்ட வசதி அளிக்க இருக்கிறது. மற்றக் கலைக்கூடங்கள் நகரில் அமைக்கப்படும் முன்பு கலைஞர்கள் தங்கள் கலைப் படைப்புகளைக் குறைந்த செலவில் கண்காட்சி அமைக்கும் ஓரிடமாக இது இருந்தது. இந்த வசதி தனியார்களாலும், நிறுவனங்களாலும் நன்கு துய்க்கப்படுகின்றது.

# ஊரறிந்த இரகசியம்....?



## உங்களுக்கும் தெரியட்டுமே!

எனது புதுமையான சேமிப்புத் திட்டம் இரட்டைப் பலன்களுக்கு உறுதியளிக்கிறது. பிராவிடெண்ட் பண்ட், CTD, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகள் போன்றவைகளில் முதலீடு செய்யப்படும் பணத்திற்குக் கவர்ச்சியான வரிவிலக்குச் சலுகைகளை வழங்குகிறது வருமான வரி சட்டங்கள்.

இவற்றுள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வரிவிலக்கு தருவதோடு மட்டுமல்லாமல், நீங்கள் இன்ஷ்யூர் செய்த நாளிலிருந்து, அபாயங்களுக்கு எதிரான பாதுகாப்பை இதன் மூலம் மட்டுமே நீங்கள் பெற முடியும்

முழு விவரங்கள் மற்றும் இன்ஷ்யூரன்ஸ் பிரீமியம்கள் மூலம் கிடைக்கும் அதிகபட்ச வரிச் சலுகைகள் பற்றி தெரிந்து கொள்ள, உங்கள் இன்ஷ்யூரன்ஸ் முகவரை ஏன் கலந்தாலோசிக்கக் கூடாது?

**ஆயுள் இன்ஷ்யூரன்ஸைப் போல் ஆதரவளிப்பது எதுவும் இல்லை!**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன் ஆப் இந்தியா**

PRATIBHA-LIC-1156/77 TAM

# வேளாண்மை மறுநிதி-அபிவிருத்திக் கழகத் திட்டங்கள்

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி மற்றும் அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் தமிழ் நாடு அரசு சில திட்டங்களை செயலாற்றி வருகிறது. இத் திட்டங்களின் நிதித் தேவையில் 75 சதவீதத்தை இக்கழகமும், மற்ற 25 சதவீதத்தைத் தமிழ் நாடு அரசும் ஏற்றுக் கொள்கின் றன. இம்மறு நிதி உதவியுடன் உள்ள திட்டங்கள் அனைத்தும், தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி மூலம் கூட்டுறவுப் பதிவாளரால் செயல்படுத்தப்படு கிறது.

**1977-78-ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படும்:**

**(1) தென்னை:—**

இவ்வாண்டு, 5 தென்னை அபிவிருத்தித் திட்டங்கள் நம் மாநிலத்தில் செயல்படுத்தப் படும். திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் 500 ஏக்கரில் புதிய தென்னந் தோப்புகள், ரூ. 13.26 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தில் 500 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கவும், 14,000 தென்னங் கன்றுகளை வயல் ஓரங்களில் நடவும் ரூ. 17. 73 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்து, சேலம் மாவட்டத் தில் ரூ. 24.38 இலட்சம் செல வில், 500 ஏக்கரில் புதிய தென் னந் தோப்புகள் அமைக்கவும், 35,000 தென்னங் கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத் தில் 900 ஏக்கரில் தென்னந் தோப்புகள் அமைக்கவும், 700 தென்னங் கன்றுகள் நடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 27.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செங்கை மாவட்டத்தில் ரூ. 28.40 இலட்சம் செலவில் 1,000 ஏக்கரில் தென்னந்தோப்புகள் அமைக்கப்படும்.

**(2) திராட்சை:—**

வட ஆர்க்காடுமாவட்டத்தில் ரூ. 24.57 இலட்சம் செலவில் 150 ஏக்கரில் திராட்சைத் தோட்டம் அமைக்கப்படும்.



**(3) ரப்பர்:—**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 9.45 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் ரப்பர் தோட்டம் அமைக்கும் கூடுதல் திட்டம் செயல்படுத்தப்படும்.

**(4) கிராம்பு:—**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 200 ஏக்கரில் கிராம்பு சாகுபடி செய்ய ரூ. 12.81 இலட்சம் செலவில் மற்றுமொரு திட்டம் செயல்படுத்தப்படும்.

**(5) பழத் தோட்டங்கள்:—**

மதுரை மாவட்டத்தில், கீழ் பழனிப் பகுதியில் பழத் தோட் டங்கள் அமைக்க ரூ. 12.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. 490 ஏக்கரில் பழத் தோட்டங்கள் அமைக்கப்படும்.



பரிசீலனையில் உள்ள திட்டங்கள்:-

மேற்கூறியவை தவிர, கீழ்க் கண்ட இதர திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன:—

(1) தென்னை:—

கோவை மாவட்டத்தில் கோவை, பொள்ளாச்சி, உடுமலை பேட்டை, அவிநாசி மற்றும் தாராபுரம் வட்டங்களில் ரூ. 2,09.71 இலட்சம் செலவில் சுமார் 7,900 ஏக்கரில் புதிதாகத் தென்னந் தோப்புகள் அமைக்கும் திட்டம்.

(2) இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ. 1,05.46 இலட்சம் செலவில் 3,000 ஏக்கரில் தென்னை அபிவிருத்திக்கான திட்டம்.

(3) கோகோ:—

மதுரை மாவட்டத்தில் ரூ. 9.64 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் கோகோ அபிவிருத்தித் திட்டம்.

(4) திராட்சை:—

கோவை மாவட்டத்தில் ரூ. 45.63 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் திராட்சை அபிவிருத்தித் திட்டம்.

(5) மல்லிகை:—

மதுரை மாவட்டத்தில் 350 ஏக்கரில் ரூ. 23.10 இலட்சம் செலவில் மல்லிகைப்பூ சாகுபடி அபிவிருத்தித் திட்டம்.

(6) ஆரஞ்சு:—

நீலகிரி மாவட்டத்தில் ரூ. 8.59 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் ஆரஞ்சு சாகுபடித் திட்டம்.



(7) மிளகு:—

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்தில் ரூ. 9 இலட்சம் செலவில் 500 ஏக்கரில் மிளகு அபிவிருத்தித் திட்டம்.

(8) காப்பி:—

மதுரை மாவட்டத்தில் ரூ. 19 இலட்சம் செலவில் 300 ஏக்கரில் காப்பித் தோட்டத் திட்டம்.

[1977-78-ஆம் ஆண்டின் வேளாண்மைத்துறை மானியக் கோரிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது.]



# பேனாவின் கதை தெரியுமா?



உலகில் ஆடவர், பெண்டிர், பண்டிதர், பாமரர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரிடமும் நான் இருக்கிறேன். நான் யார் தெரியுமா? ஏன் இந்த தயக்கம்? நான்தான் உங்கள் கையிலிருக்கும் மையூற்றுக் கருவி (பேனா)! என் வரலாற்றை அறிய வேண்டுமா? உங்கள் ஆவல் எனக்குத் தெரிகிறது.

இதோ சொல்கிறேன் கேளுங்கள்...! உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுகள் எந்த நாட்டிலுள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆம். அதே எகிப்து நாட்டின் மக்கள்தான் முதன் முதலில் என்னைக் கண்டறிந்தவர்கள். பின்னர் சுமேரியர்கள் உலகு எங்கும் எனது புகழைப் பரப்பிட்டவர்கள். ஆதி எழுத்தெல்லாம் மணலில் விரலால் எழுதப்பட்டதுதான். பின்னர் பச்சைக் களிமண்ணில் குச்சிகளைக் கொண்டு எழுதச் செய்து அவற்றைச் சுட்டுப் பாதுகாத்து வந்தனர். செல்வம் மிக்கவர், அரசர் போன்றவர்கள் அன்னத்தின் தூவி, மயில் இறகு போன்ற அரிதான பொருள்களை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். கவிஞர்கள் கவிதைகளை எதில் எழுதி வந்தனர் தெரியுமா? நல்ல பதப்படுத்தப்பட்ட பனை ஓலைகளில் எழுதி வந்தனர். இவை எல்லாம் நீண்ட காலத்திற்குப் பாதுகாத்து வைக்க முடியாது அல்லவா?

எனவே, எழுத்துத் துறையில் பல்வேறு மாற்றங்கள் நாளடைவில் ஏற்பட ஆரம்பித்தன. அவற்றுள் ஒன்று காகிதம் கண்டுபிடிப்பாகும். அக்காகிதத்தில் எழுதுவதற்கு அனைவரும் பயன்படுத்திய கருவிதான் நான். என்னை எல்லோரும் பயன்படுத்தினர். பயன்படுத்துகின்றனர். பயன்படுத்துவர். நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி பார்த்தீர்களா? என்னிடமிருந்து பிரிக்க முடியாத தோழன்தான் 'மை' என்ற கலவைப் பொருள். இக்கலவைப் பொருள் படிகார உப்பு, கடுக்காய்த் தூள், அன்னவேதி என்ற வெண்ணிற உப்பு ஆகியவற்றைக் கலவையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டது.

ஒரு மெல்லிய பளபளப்பான கட்டைகளின் நுனியில் உலோகத்தாலான கூரிய 'நிப்' என்ற உருவத்தைச் செய்து பொருத்தி, மையில் தோய்த்து எழுதி வந்தனர். ஆனால் அதை எடுத்துச் செல்வது கடினமல்லவா? அதற்காக என் உருவத்தில் இன்னும் எத்தனையோ முன்னேற்றங்கள் செய்வதற்கான அவசியம் ஏற்பட்டது. என் முனை தேயாமல் நீடித்து உழைக்க 'இருடியம்' என்ற பொருளைச் சேர்த்து வலுப்படுத்தினர். தங்கத்தாலான நிப்புகள் கூட உண்டு. அவை அதிக நாள் நீடித்து உழைக்கும்.

இப்படிப்பட்ட முன்னேற்றத்தைக் கண்டுபிடித்து உலகிற்கு 1864-ஆம் ஆண்டு என்னை அறிமுகப்படுத்தியவர் அமெரிக்க அறிவியல் அறிஞர் 'வாட்டர்மென்' என்பவர் ஆவார். மெழுகு போன்ற வேதியல் கலவைப் பொருள் ஒன்றினைத் தீயிலிட்டு உருக்கிய பின் அக்குழம்பினை மெல்லிய குழாய் போல் செய்தனர். அதுவே மை நிரப்புவதற்குப் பயன்பட்டது. பின்னர் கழுத்து என்ற ஓர் அமைப்பினை அதன் மேல் பொருத்தினர். அந்தக் குழாயின் உள் இருக்கும் 'மை' எப்பொழுதும் காயாமல் ஊறி வெளிவர நாக்கு என்ற பகுதியின் மீது நிப்பையும் பொருத்தினர். இவை எல்லாம் பாதுகாப்புடனும் எடுத்துச் செல்ல மூடி என்ற பகுதியையும் வசதியாகப் பொருத்தி எனக்கு முழு உருவம் அளித்தனர். பிளாஸ்டிக் உலகம் என்று அழைக்கப்படும் இந்நாட்களில் என் உடல் பகுதிகள் வண்ண வண்ண பிளாஸ்டிக்குகளால் உருவாக்கப்பட்டதால் நான் தோற்றத்தில் மிடுக்குடனும், பொலிவுடனும், கவர்ச்சியுடனும் உலகில் உலவி வருகிறேன்.

பால் பாயிண்ட், செல்ஃப் ஃபில்லர் போன்றவர்கள் என் உடன் பிறந்தவர்களே! தற்போது நான் மிக மலிவான விலையிலும் மிக உயர்ந்த விலையிலும் கிடைத்து வருகிறேன். ஆயுள் முழுவதும் சாவி கொடுக்காமல் ஓடும் கைக் கடிகாரம் போல வாழ்நாள் முழுவதும் எழுதிப் பயன் தர வல்ல என் இனத்தவரை இன்று உலகில் தொழில் முன்னேற்றம் அடைந்த நாட்டினர் அனைவரும் தயார் செய்து வருகின்றனர்.

நான் இந்தியப் பல்வேறு பெயர்களில் உருவாகி வருகிறேன். நான் இந்நாட்டின் முதுகெலும்பு என்று சொன்னால் அது மிகையாகாது. 'எழுதுகோல் போர் வீரனின் வாளைக் காட்டிலும் கூர்மையானது' என நீ அறிந்திருப்பாய்! என் சக்தியால் இவ்வுலகை வாழ வைக்கவும், வீழ வைக்கவும் முடியும்.

எனவே, தம்பி, தங்கைகளே! எனது வரலாற்றையும் பயனையும் ஒருவாறு உணர்ந்த நீங்கள் என்னைச் செம்மையாகப் பயன்படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வீர்களாக!

**—ஏ. ஆர். தீனதயாளு ரெட்டி,**

**(சென்னை வானொலிக் கல்வி ஒலி பரப்பில் 8—9—77 அன்று ஒலி பரப்பாகியது).**



# புதுப்பட்டி முனுசாமி புன்னகை பூத்திட உதவுங்கள்!

அவன் வசிக்கும் கிராமத்துக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டால், முனுசாமி சிரித்து மகிழ்ந்திடுவான். அவன் குடிநீர் தேடி மைல் கணக்கில் இனி நடந்து செல்ல வேண்டியதில்லை!
நீங்கள் உதவிடலாம்.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகளை வாங்குங்கள்.

ஏனெனில் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் ஒரு நல்வாழ்வுத் திட்டம்.
இதன் வருவாய் கிராமப் பகுதிகளில் குடிநீர் வசதிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஏராள பரிசுகள்! வென்றிட பல வாய்ப்புகள்!!

ஒரு வரிசைக்கு வழங்கப்படும் பரிசுகள் விவரம் :

| பரிசு | தொகை ரூ | பரிசுகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை ரூ |
|---|---|---|---|
| I | 50,000 | 2 | 1,00 |
| II | 10,000 | 3 | 30, |
| III | 5,000 | 5 | 25,000 |
| IV | 1,000 | 25 | 25,000 |
| V | 500 | 100 | 50,000 |
| VI | 100 | 500 | 50,000 |
| VII | 50 | 2000 | 1,00,000 |
| ஆறுதல் பரிசுகள்: | | | |
| I | 1,000 | 4 | 4,000 |
| II | 500 | 6 | 3,000 |
| III | 300 | 10 | 3,000 |
| மொத்தம் : | | 2655 | ரூ . 3,90,000 |

## இன்றே வாங்குங்கள்
## தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

2 முதல் பரிசுகள் ரூ. 50,000 வீதம் ஒவ்வொரு வரிசைக்கும்

**சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- மட்டுமே**
**குலுக்கல் நாள்: 19.11.1977**

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600 002



DIPR/49961/77



அட்டைபடக் கட்டுரை

# வேடந்தாங்கல் நீர்ப்பறவைச் சரணாலயம்

—ச. அ. ரஹமதுல்லா இ.வ.ப.,
தலைமை வன விலங்குக் காப்பாளர் தமிழ்நாடு.

தமிழ்நாட்டில் மாரிக்காலத்தில் நீர்ப் பறவைகள் நீர்நிலைகளுக்கு மத்தியில் அல்லது நீர் நிலைகளுக்கருகிலுள்ள மரங்களில் கூடு கட்டி இனம் பெருக்குவது வழக்கம். சென்னையிலிருந்து சுமார் 53 மைல் தொலைவிலுள்ள 'வேடந்தாங்கல்', 'கார் கிளி' என்ற 2 ஏரிகளில் அடர்ந்த கடப்ப மரத் தோப்புக்குள் 14 வகை நீர்ப் பறவைகள் பெருங்கூட்டமாய்க் கூடி, மரக் கிளைகளில் அடுத்தடுத்துக் கூடு கட்டி, முட்டையிட்டு, குஞ்சு பொரிக்கின்றன. சுமார் 200 வருடங்களுக்கு மேல் இவை இந்தத் தோப்பிலேயே வம்ச வம்சமாக வாழ்ந்து வருகின்றன. தென்னிந்தியாவில் 10, 15 இடங்களில் பலவகை நீர்ப் பறவைகள் வாழ்ந்தாலும், வேடந்தாங்கலில் பார்க்கக்கூடிய காட்சியைப் போல் வேறெங்கும் அவ்வளவு சிறப்பாகக் காண்பதரிது.

வேடந்தாங்கல் ஏரியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட கடப்ப மரங்க்ள் இருந்தன. சென்ற 10 ஆண்டுக்காலமாகப் புயலாலும், வறட்சியினாலும் பாதிக்கப்பட்டு இப்பொழுது சுமார் 100 கடப்ப மரங்களே எஞ்சியுள்ளன. இதையறிந்து வனத்துறை சுமார் 90 பெரிய கடப்ப மரங்களை வேற்றிடத்திலிருந்து வேர் மண்ணுடன் கொண்டு வந்து நட்டு உள்ளனர். மேலும் நாற்று வைத்து உண்டாக்கப்பட்ட கடப்ப மரங்களும், நீர் மருது மரங்களும் சுமார் 1,600 உள்ளன. பெருமரங்களிலும், சிறு மரங்களின் கிளைகளிலும் ஆயிரக் கணக்கான பறவைகள் கூடு கட்டி, இரை தேடி, முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வருகின்றன. குஞ்சுகள் வளர்வதைப் பார்ப்பது கண் கொள்ளாக் காட்சியாகும்.

நமது மாநிலத்தில் ஆயிரக் கணக்கான ஏரிகளிலிருந்தும் 'வேடந்தாங்கல்', 'கார்கிளி' போன்ற ஏரிகளிலே பறவைகள் ஆண்டுதோறும் கார்காலத்தில் வந்தடைவதன் காரணம் சிறப்பாகச் சில வசதிகள் இவ்விடத்தில் இருப்பதேயாகும். குஞ்சுகளுக்கு வேண்டிய அளவு இரையான மீன், தவளை, நத்தை, பூச்சிகள் ஆகியவை அக்கம் பக்கத்திலிருப்பது முதலாவது காரணமாகும். நிலத்தில் வாழும் கீரி, பூனை போன்ற எதிரிகள் அணுகாதவாறு பெரிய மரங்களைச் சுற்றி ஆழமாகத் தண்ணீர் தேங்கியிருப்பது இரண்டாவது காரணமாகும். மூன்றாவது காரணம் இந்தக் கிராமத்தினர் தொன்றுதொட்டு இப்புள்ளினங்களுக்கு நல்ல பாதுகாப்பு அளித்து வருவதாகும்.

## புலம் பெயர் புள்:

வசதி படைத்தோர் கோடைக் காலத்தில் எவ்வாறு நீலகிரி, கொடைக்கானல் போன்ற வாசஸ்தலத்திற்குச் செல்கிறார்களோ அல்லது குளிர்மிகுந்த ஊர்களிலிருந்து சற்று உஷ்ணமுள்ள இடத்திற்கு வருகிறார்களோ அதே போல் சில வகைப் பறவைகள் இமயமலை, அதற்

பறவைகளைக் கண்டு களிக்கவரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக, வனத்துறையினரால் வேடந்தாங்கலில் கட்டப்பட்டுள்ள ஓய்வு இல்லம்.



கப்பாலுள்ள பிரதேசங்களில் குளிர்காலத்தில் எல்லாம் பனி யால் மூடப்பட்டு இரை கிடைக் காத நிலையில் அங்கிருந்து இந்தியா, ஸ்ரீலங்கா போன்ற தெற்கேயுள்ள வெப்ப நாடு களுக்கு வந்து, சில மாதங்கள் தங்கியிருந்து மறுபடியும் வடக்கே கோடைகாலம் பிறக்கும்பொழுது நெடுந்தூரம் பயணம் செய்து வடக்கேயுள்ள தனது சொந்த நாட்டை அடையும். இவை இரை தேடுவதற்காக வருவதேயல்லா மல், கூடுகட்டி இனம் பெருக்க வருவதில்லை. இவ்வாறு வடக்கே வடதுருவம், சைபீரியா முதலிய தேசங்களிலிருந்து 4,000 மைல்கள் தெற்கே வந்து, கோடைக்காலம் பிறந்ததும், தம் சொந்த நாட்டிற்குப் போவதைப்பண்டைக் காலத்தில் ‘புலம் பெயர்தல்’ என்று சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. இதையே தற்காலத்தில் ‘வலசை போதல்’ என்றும் கூறுகின்றனர். இவ்வாறு வேடந்தாங்கல் ஏரிக் குள் புலம் பெயர் புள்கள் வரு வதற்கு ஆதாரம் உள்ளது. 30 ஆண்டுகட்கு முன்பு ‘‘கிழுவை’’ என்ற ( Whistling teal ) வேடந் தாங்கலில் கொல்லப்பட்டபோது அதன் காலில் இருந்த அலுமினி யக் காப்பு ‘மாஸ்கோ’ என்ற எழுத்துக்களுடன் காணப்பட் டது. இதிலிருந்து - மாஸ்கோ நகர்ப் பறவை நிபுணர்கள் அப் பறவையின் காலில் கட்டிய காப்பு வேடந்தாங்கலில் கிடைக் கப் பெற்றமையால், அப்பறவை மாஸ்கோவிலிருந்து வேடந்தாங் கலுக்கு வலசை-வந்தது என்பது தெரிய வருகிறது.

‘வேடந்தாங்கல்,’ ‘கார்கிளி’ ஆகிய இரு ஏரிகளிலே மீன், தவளை, பூச்சி, நத்தை போன்ற இரை வகைகள் மிகுதியாக இருப்பதால் கூடு கட்டாத பறவையினங்கள் சிலவும் ஏரிக்கு வருவதுண்டு. இவ்விரு ஏரிகளில் உள்ள மரங்கள் பறவைகளுக்குக் கூடுகட்டுவதற்கு மட்டுமில்லாது அடை மரங்களாகவும் உதவுகின் றன.

வேடந்தாங்கலில் காணப்படும் அயல்நாட்டுப்புலம் பெயர்ப் பறவைகளில் முக்கியமானது கிழுவை ( Teals ). வாலாட்டிக் குருவி வீடு கட்டாது; இரை தேட மட்டும் வரும். உள்நாட்டுப் பறவைகளில் முக்கியமானது பவளக்காலி ( Black winged stilt ). இவை கரையருகில் சிறு கூட்டங்களாகக் காணப்படு கின்றன.

சிற்சில வேளைகளில் இங்கு கூழைக்கடா ( Spot billed



பறவைகள் தங்குவதற்குவசதியாக, பெரிய கடப்ப மரங்களை வேருடன் பெயர்த்து கொண்டுவந்து நடுகின்றனர்.

pelican ) என்னும் பறவைகள் வந்து சில நாட்கள் தங்குகின்றன.

நாமக்கோழி எனப்படும் வெள்ளை நாமம் தீட்டிய கருநீர்க் கோழி ( Coots ) நீர்மட்டத்தை உற்று நோக்கியவாறே பறத்தலை யும், உப்புக் குருவிகளையும் (River tern) பார்க்கலாம்.

இவ்வேரிகளில் கூடுமட்டும் கட்டி இனம் பெருக்காது சஞ் சரிக்கும் பறவைகளில் முக்கிய மானவை வெண்கொக்கு (Egret) உண்ணிக் கொக்கு, மடையான் ஆகியனவாகும்.

கடப்ப மரக்கிளைகளில் மட்டு மன்றி, மரங்களின் அடியிலும், கரையோரமாகவும் ஏரியில் நீந்தி வளையவரும் முக்குளிப்பான் (Dabchick), நீர்க்கோழி (Moorhen) ஆகியவைகளையும் இங்கு சாதா ரணமாகக் காணலாம்.

இவ்வாறு நெருக்கமாகவும், பெருங்கூட்டமாகவும் பறவைகள் கூடுகட்டுமிடத்தில் முட்டை களுக்கும், குஞ்சுகளுக்கும் ஏரி யைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டு இருக்கும் காக்கை, பருந்து, கருடன் போன்ற எதிரி களால் தீங்கு விளைவது உண்டு.

வேடந்தாங்கல் சரணாலயத் தில் வாழும் பறவைகளில் 14 வகைகள் முக்கியமானவை. அவ்வையாவன:—

**நீர்க்காகங்கள் (Cormorants):** சிறியது, நடுத்தரமானது, பெரி யது என 3 வகையாக நீர்க் காகத்தைப் பிரிக்கலாம். இவை நீரில் மூழ்கி நீந்துவதில் திறமை யுள்ளவை. நீரில் மூழ்கி விரைந்து மீன்களைப் பிடிப்பதில் தேர்ச்சி பெற்றவை. இவை நீந்தியும் மூழ்கியும் இரை தேடுவதை இந்த ஏரியில் சுலபமாகப் பார்க்கலாம். மாலையில் இவை அணி அணியாகக் கருந்திரளாக இறக்கையடித்து வந்து தோப்பிலடையும் காட்சி பார்ப்பவர்க்குச் சிந்தனையைக் கிளரும்.

**2. பாம்புத் தாரா ( Darter ):** நீர்க்காகத்திற்கு ஒரு வகை எட் டிய உறவு என்று சொல்லப்படு வது பாம்புத்தாரா. இது தண் ணீரில் மூழ்கி நீந்தும் பொழுது நீண்ட கழுத்தும், சிறு தலையும், குத்துக்கத்தி போன்ற அலகுமே நீரின் மேலிருப்பதால், தலை தூக்கி வரும் பாம்பு போலவே தென்படும். இதை ஆங்கிலத்தில் ‘ Snake bird ’ என்று சொல் வதுண்டு.

**3. வெண்கொக்குகள் (Egrets)** சிறியது, நடுத்தரமானது, பெரியது என்று 3 வகை களாக வெண்கொக்குகளைப் பிரிக்கலாம். இவை சுத்த வெள்ளை நிறமாக இருக்கும். அலகு, கால் களின் நிறம், அளவு ஆகியவற்றி லிருந்து இதன் இன அடையாளத் தைத் தெரிந்து கொள்ள லாம். சிறிய வெண்கொக்கை அதன் அளவிலிருந்தும் கருப்புக் கால்களிலிருந்தும், அலகுகளி லிருந்தும் அறிந்து கொள்ளலாம். கூடுகட்டும் காலத்தில் இதன் அடித்தலையினின்றும் இரண்டு நீண்ட இளஞ்சிறகுகள் தொங்கு வதைக் காண அழகாக இருக்கும். அதே மாதிரி, மார்பிலும் முதுகி லும் மெல்லிய வெண்சிறகுகள் தென்படும். இது தன் பரந்த இறக்கைகளை விரித்து நிதான மாகவும், ஒய்யாரமாகவும்

பறந்து செல்வது மிக அழகிய காட்சியாகும். நடுத்தர வெண் கொக்கிற்கும், பெரிய வெண் கொக்கிற்கும் அளவிலுள்ள வேறுபாடு தூரத்தில் தென்படாது. பெரிய வெண்கொக்கே கொக்குகளில் உயரமானது. கரையோரங்களில் இது மெல்ல நடந்து மீன் வேட்டையாடும்.

**4. உண்ணிக் கொக்கு அல்லது மாட்டுக் கொக்கு (Cattle Egret):** புல்தரையில் மேயும் மாடுகளைப் பின்பற்றிச் செல்வதால் இதற்கு 'மாட்டுக் கொக்கு' என்று பெயர். இவை முக்கியமாகப் பூச்சிகளையே புசிக்கும். அலகு-மஞ்சள் நிறம்.

**5. மடையான் (Pond Heron):** சென்னையிலும், சுற்றுப் பக்கத்திலுமுள்ள ஊர்களிலும் சகஜமாகக் காணப்படும் இப்பறவைக்கு 'மடையான்' என்பது பழந்தமிழ்ப் பெயர். இதைக் 'குருட்டுக் கொக்கு' என்றும் அழைப்பர். நம்மை அது கண்ணைக் கட்டி மயக்குவதைக் குறிக்கும். ஆனால் அது குருடில்லை. மீன் வேட்டைக்காகக் கரையோரமாக நின்று கொண்டு இருக்கையில் அதன் நிறம், சூழ்ந்துள்ள மண் நிறத்தை ஒத்திருக்கும். திடீரென்று பறந்து செல்கையில் அது வெண்பறவையாக மாறித் தோற்றமளிக்கும்.

**6. வக்கா – அல்லது அன்றில் (Night Heron):** இவை பெரும்பாலும் இருட்டிய பின்பே வெளிவரும். வயதுவந்த வக்காவின் மேல்புறம் சாம்பல் நிறமாயிருக்கும். இதன் மேல்தலை கறுத்து இருக்கும். கருநிறச் சிறகுகளும், இரண்டு நீண்ட வெண்சிறகுகளும் செறிந்த கொண்டை இதற்குண்டு; அடிப்பாகம் வெளுப்பு; கூடுகட்டுங் காலத்தில் கால் சிவந்திருக்கும். வளர்ச்சியடைந்தும் இன்னும் பருவமடையாத வக்கா, மடையானைப்போல் களிமண் நிறப் புள்ளிகள் கொண்டிருக்கும். ஆனால் வெள்ளை இறக்கைகள் கிடையாது.

**7. நரையான் (Grey Heron):** இந்தப் பறவைக்கு ''நாரையான்'' என்ற பெயரும் வழங்குகிறது. தமிழில், பறவையினங்களின் பெயர்களோடு ''புள்'', 'பட்சி', 'குருவி' என்ற பொதுப் பெயர்களையும் கடையடை மொழிகளாகச் சேர்த்துச் சொல்வது வழக்கம். உதாரணம்:— செம்போத்துப்புள், சோளப்பட்சி, மைனாப்பட்சி, தினைக்குருவி. வேடந்தாங்கலில் ''நாரையன் பட்சி'' என்பது ''நாராயணப் பட்சி'' என்று மாறி, இப்பெயராலேயே நரையானை அழைக்கிறார்கள்.

வக்கா, மடையான், கொக்குகள், நரையான் இவையெல்லாம் பறந்து செல்லும்போது கழுத்தை மடக்கி, தலையை முதுகை ஒட்டினாற்போல் இழுத்துக் கொள்ளும். நாரை வகைகள் கழுத்தை நீட்டிப் பறக்கும்.

**8. நத்தைக் குத்தி நாரை (Open Billed Stork):** இந்திய நாரையினங்களில் இதுவே சிறியது; ஆயினும் வேடந்தாங்கலிலுள்ள பறவைகளில், நரையான், துடுப்பு மூக்கு நாரை இவைகளுடன் ஒப்பிடும்போது இது பெரியது. நரையான் அளவில் இன்னும் உடல் தடித்திருக்கும். வயதுவந்த நத்தைக் குத்திகளின் அலகுகள், மேலலகும் கீழலகும் ஒன்றோடொன்று இணைந்து கூடாமல், பறவை வாய் மூடியிருக்கும்போதும் இடையே ஒரு விரிசல் (இடைவெளி) இருக்கும்; இளம் பறவைகளுக்கு இந்த இடைவெளி இருக்காது. நீரில் வாழும் நத்தையினங்களே இந்த நாரையின் முக்கிய இரை. மீன் முதலிய மற்ற இரையையும் இது தேடும்.

மாலையில் இரைதேடி வீடு திரும்பும் நத்தைக்குத்திகள் பெருந்திரளாகக் கூடி, வானத்தின் உச்சியில் தோப்பின் மேல் இறக்கை பரப்பி வட்டமிடும் போது ஆகாயத்தில் மிதக்கும் புள்ளிகளாகவே தென்படும். அவ்வளவு உயரத்தில் அவை பறக்கும். சில நிமிஷங்கள் இப்படி வட்டமிட்டபின், எல்லாம் ஒருங்கே இறக்கை மடித்துப் பெரும் வேகத்துடன் செங்குத்தாய்ப் பாய்ந்து இறங்கும். தோப்பை அணுகினதும், பல திக்குகளிலும் சிதறி, இறக்கை விரித்துத் தத்தம் கூடுகளை நோக்கிப் பறந்து செல்லும் இந்த அற்புதமான காட்சியைக் கண்டவர் எளிதில் மறக்க மாட்டார்கள்.

**9. துடுப்பு மூக்கு நாரை:** இதை ஆங்கிலத்தில் Spoon bill என்பர். வேடந்தாங்கலில் ''மண்வெட்டு வாயன்'' என்று சொல்லுகிறார்கள். சட்டுவம்போல் நுனி விரிந்து சப்பையாகவுள்ள விசித்திர அலகைக் கருதியே இவ்வாறு பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஜதை கூடும் பருவத்தில் இதற்குத் தலையின் பின்புறமாக வெள்ளைச் சிறகுகளடர்ந்த ஒரு பெருங்குடுமியுண்டு. வேடந்தாங்கலில் வந்திறங்கிய நாளிலிருந்து இங்கிருந்து வெளியேறும் வரை இங்குள்ள துடுப்பு மூக்கு நாரைகளுக்கு இப்படிக் குடுமி வாய்த்திருப்பதைக் கவனிக்கலாம். குஞ்சுகளுக்கும், வளர்ந்த இளம் பறவைகளுக்கு மட்டுமே தலை மொட்டையாயிருக்கும்.

**10. கங்கணம் (White Ibis):** இதுவும் கிட்டத்தட்ட துடுப்பு மூக்கு நாரை அளவில், அதைப்போல் வெள்ளையாகவிருக்கும். ஆனால், கழுத்துச் சிறகற்றும், தலையும்மூக்கும் கறுப்பாயும் இருக்கும். இதன் அலகு வளைந்து அரிவாள் போலிருப்பதால் வேடந்தாங்கலில் இதை 'அர்வாள் மூக்கன்' என்கிறார்கள். வக்காக்களைப் போல இதுவும் இரவில் இரை தேடும் பறவை. ஆனால், குஞ்சுகளுக்காக இரைதேடப் பகல் போதிலும் வெளிக்கிளம்பும்.

இவ்வேரிக்கு வலசை வரும் பறவைகளாவன: பெரிய சிறவி, (Garganey Teals), தட்டவாயன் (Shoveller), மார்க்களியன் (Pin Tail), பவனக்காலி (Black winged stilt), கொசு உள்ளான் (Common sand pipers), உப்புக்கொத்தி (Curlew), மஞ்சவாலாட்டி (Yellow wagtail), மானம்பாத்தான் (Grey wagtails).



பலவிதமான பறவைகளைப் பார்த்து மகிழ்வதற்கு வேடந்தாங்கல் மிகவும் ஏற்றது.



## வெள்ளத் துயர்துடைப்புப் பணிகளுக்கு அள்ளி வழங்குங்கள் !

—முதலமைச்சர் வேண்டுகோள்.

வறட்சியும், வெள்ளமும் இயற்கையின் இரட்டைக் குழந்தைகள்; அதுவும் இன்னல் விளைவிக்கும் இரட்டைக் குழந்தைகள் (Notorius twins of Nature) என்று கூறப்படுகிறது. இவை களால் தமிழகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது.

வறட்சியை வென்றிட முயன்றுவரும் தமிழ்நாடு அரசுக்கு, அண்மையில் ஏற்பட்ட புயலால் தோன்றிய வெள்ளம் விளைத்த வேதனை யைத் தீர்க்கும் பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

எனவே, "வெள்ள நிவாரணப் பணிகளுக்கு, கருணை உள்ளம் படைத்த பொதுமக்கள் அனை வரும் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும்" என்று மாண்புமிகு தமிழக முத லமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இதற்கான காசோலைகளை (Cheques) "முதல் அமைச்சர் பொது நிவாரண நிதி" என்று குறிப் பிட்டு, சென்னை கோட்டையில் உள்ள நிதித் துறைத் துணைச் செயலாளருக்கு அனுப்ப வேண்டும்.

## தமிழக வெள்ள நிவாரணத்திற்கு பிரதமர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினர்.

டெல்லிக்குச் சென்றிருந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் புயலாலும் மழையாலும் ஏற்பட்ட சேத விவரங்களையும், தமிழ்நாடு அரசு மேற் கொண்டுள்ள நிவாரண நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறினர். தமிழகத்தின் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு உதவி செய்வதற்காக, பிரதமர் அவர்கள் உடனடியாக பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்கியுள்ளார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

—அண்ணல் காந்தியடிகள்.



இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!

ஜெய்—

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

